# புதுக்கோட்டை ஸமஸ்தான

# தேசீய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1945-ம்௵ ஜூன்மீ 4௳ திங்கட்கிழமை [ந. 250


தேசீய யுத்த முன்னணி விஷயங்களைப் பற்றிய கட்டுரைகளை பத்திராதிபர் அன்புடன் வரவேற்கிறார். அக்கட்டுரைகள், தகுதியுள்ளவைகளாக இருக்கும் பக்ஷத்தில், கட்டுரை ஆசிரியரின் பெயருடன் வெளியிடப்படும். கட்டுரைகள் சுருக்கமாக இருக்கவேண்டும்; ஒரு வாரத்திற்கு முன்னதாகவே அனுப்பவேண்டும்.

பிரஸங்கம் CCL.

## ஐரோப்பியப் போர் சரித்திரத்திலேயே முக்கியமான ஜெர்மனியின் பூர்ணமான வீழ்ச்சியுடன் முடிந்துவிட்டது.

## ஜப்பானியர்களும் தோல்வியிலிருந்து தப்பிக்க முடியாது.

புதுக்கோட்டை தேசீய யுத்த முன்னணியின் ஆதரவில் 1945-ம் வருஷம் மேமீ 24௳யன்று ஏம்பலில் புதுக்கோட்டை திவான்

## ஸர் அலெக்ஸாண்டர் டாட்டன்ஹாம் C. I. E.

அவர்கள் ஆற்றிய சொற்பொழிவு.

---

என்னுடைய இன்றைய சொற்பொழிவு மிகவும் நீண்டதாக இருக்காது. ஐரோப்பாவில் யுத்தம் முடிந்துவிட்டது. ஜெர்மனியிலுள்ள பெரிய நகரங்களைப்போல, நேசதேச விமான நடவடிக்கையாலும், வெடிகுண்டுவீச்சினாலும், தீப்பற்றி பாழாகிக்கிடக்கும் பெர்லினை ருஷ்யர்கள் கைப்பற்றியபின், மேற்குப் போர்முனை பூராவிலும் இருந்த ஜெர்மானியர்கள் பிரிட்டிஷ் அமெரிக்கப் படைகளிடம் சரண்புகுந்தன. அதன்பின், கிழக்குப் போர்முனையிலுள்ள ருஷ்யர்களிடமும் அவைகள் சரணாகதி செய்தன. செகோஸ்லாவேகியாவின் தலைநகரமான பிராக்கில் மட்டும் ஜெர்மானியர்கள் போராடிவந்தார்கள். இரண்டு பெரிய ருஷ்ய அமெரிக்க சேனைகளுக்கு மத்தியில் அகப்பட்டுக்கொண்டதினால் அவர்களின் நிலைமையும்

மோசமாகிவிட்டது. இப்பொழுது அவர்களும் சரண்புகுந்துவிட்டார்கள். இதாலி, ஹாலந்து, டென்மார்க், நார்வே முதலியவிடங்களிலுள்ள ஜெர்மானியர்களும் சரணாகதி செய்துவிட்டார்கள். சரண்புகுவதற்காக யூ-படகுகள் நேசதேசத்துறைமுகங்களுக்கு வந்து கொண்டிருக்கின்றன. ஆகிலும், இன்னும் அநேகங்களைத் தீர்த்துக்கட்டவேண்டியிருக்கிறது. ஜெர்மன் கடற்படை, விமானப்படையில் எஞ்சியுள்ளவைகள் சரண்புகுந்துவிட்டன, மிலியனகள் கணக்கான ஜெர்மானியர்கள் சரணாகதி செய்தனர். சரித்திரத்திலேயே இதுமாபெரும் வீழ்ச்சியாகும். யுத்தகாலத்தை குறுக்கியதற்கான கியாதி, ஜெர்மனியின் முக்கியமான நகரங்களை பாழாக்கியதும், ஜெர்மனியின தொழிற்சாலைகளை அழித்ததும் போக்குவரத்துகளை சீர்கெடுசெய்து போரை நடத்தமுடியாமல் ஜெர்மானியர்களைச் செய்ததுமான பிரிடிஷ் அமெரிக்க விமானப்படைகளுக்கு உரித்ததாகும். ஒரு விமானப்படை குறைவான உயிர்ச்சேதத்துடன் அபாரமான லாபங்களைச் சம்பாதிக்கக்கூடும். ஆகிலும் விமானப்படை மட்டும் தரைப்படைகள் உதவியன்னியில் ஒரு தேசத்தை ஜெயித்துவிடமுடியாது. யூ-படகுகள் நடமாட்டத்தையும் சமாளித்து, கடல் மார்க்கஙகளைக்காப்பாற்றி, ஐரோபபாவுக்கு மனிதர்களையும், தளவாடங்களையம், ருஷயாவுக்கு யுத்த முஸ்தீப்புகளையும் எடுத்துச்சென்ற சாமான் கப்பல்கூட்டங்களுக்குத் துணைக்காவல் செய்ததும், இஙகிலாந்தை வறுமைக்கு உள்ளாகாமல் காப்பாற்றியதுமான பிரிடிஷ் அமெரிக்க கடற்படைகளின் சேவையையும் நாம் பாராட்டாமல் இருக்கமுடியாது. ஆகையினல் ஈஸ்வரன் அருளால் நம்முடைய வந்தனமும், பாராட்டும், மூவகைப்பட்ட சேவைப்படையினருக்கும், நல்ல திட்டங்களைப்போட்டு அவைகளை நடாத்திவைத்தவர்களுமான ராஜதந்திரிகளுக்கும், ஜெனரல்களுக்கும் உரித்ததாகும். உலகத்தில்ஏற்பட்டிருந்த துஸ்வப்பனம் மறைந்துவிட்டது. இனிமேல் நாஸிகளின் மூர்க்கத்தனமான, காட்டுமிராண்டித்தனமான, இறக்கமற்ற தாக்குதலைக்கண்டு நாம் பீதியடையவேண்டியதில்லை. சகலவிதமான ஜாதிகள், மதங்களைச்சேர்ந்த பொதுமக்களும், அகதிகளும், அடைக்கப்பட்டிருந்த ஜெர்மன் காவல் முகாம்களைக் கைப்பற்றியதன்மூலம் வெளியாகும் நாஸிகளின் கொடுமை அளவு நம்மை பிரமிக்கச்செய்கிறது. இந்தக் கொடுமைக்கு உடந்தையாகவும், அல்லது அதை ஆமோதித்ததும் அல்லது விதிவசமென்று நினைத்து ஏற்றுக்கொண்டதுமான ஜனங்கள் எவ்விதம் உலகத்தின் மக்களாக இருக்கக்கூடுமென்பது ஒரு பெரிய பிரச்னையாகும். ஹிட்லர்இறந்துவிட்டானென்று சொல்லபபடுகிறது. ஆகிலும் அவனுடைய சாவைப்பற்றி பல்வேறு விருத்தாந்தஙகள் கிடைத்துள்ளன. சிலர்கள் ஜனாதிபதி ரூஸ்வெல்டைப்போல ஹிட்லரும்ரத்தநாளம் வெடித்து இறந்தானென்றும், மற்றும் சிலர், அமர்க்களத்தில் இறந்தான் என்றும் சொல்லுகிறார்கள். அவனுடைய சவம் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. அது பெர்லினின் பாழான கட்டடங்களுக்கு அடியில் இருக்கலாம். அல்லது இல்லாமலும் இருக்கலாம். சிலமாதங்களுக்கு முன்பே அவனை ஜெனரல்கள் கொன்றுமிருக்கலாம், அவனுடைய ஜோடிகள் அவனுடைய ஸ்தானத்தை அதுமுதல்வகித்துவந்திருக்கலாம். அதற்குப்பின், அவன் பொதுஜன மத்தியில் வரவியில்லை. அல்லது அவன் மாறுவேஷத்துடன் ஒளிந்துகொண்டிருக்கலாம். ஆகிலும் வெகுசீக்கிரத்தில் நமக்கு உண்மை கிடைத்துவிடும். ஜெர்மன் விமானப்படைத் தலைவரான கோயரிங்கும் மற்ற நாஸித் தலைவர்களும் பிடிப்பட்டுவிட்டார்கள். பிரசார நிபுணரும், பொய்யருமான கோயபல்ஸ் தற்கொலைசெய்துகொண்டான். இதாலியில், இதாலிய தேசாபிமானிகள் முசோலினியை கைதுசெய்து அவனை சுட்டுக்கொன்றார்கள். எதேச்சாதிகாரிகளுக்கு சிக்ஷாகாலம் வந்துவிட்டது.

2. கிழக்கிலும்கூட யுத்தம் நமக்கு வெற்றிகரமாகவே நடைபெற்றுவருகிறது. பர்மாவின் தலைநகரமான ரங்கூன் பிடிபட்டுவிட்டது. அது ஒரு முக்கியமான துறைமுகம். அதைக் கைப்பற்றியலிருந்து பர்மாவிலுள்ள நேசதேசப்படைகளுக்கு ஸப்ளைகளை அனுப்பும் பிரச்னைக்கு சாதகமேற்படும். ஜப்பானியர்கள் அமைத்திருக்கும் தேசாபிமானிகள் கொரில்லாக்கள், பர்மா தேசிய சேனை முதலியவைகளும், ஜப்பானியர்களை நாசம் செய்துவருகின்றன. அவர்கள் இப்பொழுது நேசதேசப்படையுடன் சேர்ந்துவிட்டார்கள். ஜப்பானியர்கள் பின்வாங்கி ஓடும் மார்க்கங்களெல்லாம் மூடப்பட்டுவிட்டன. சைனவில் சீனர்கள் ஜப்பானியரை பலமாக எதிர்த்துத்தாக்க ஆரம்பித்துவிட்டார்கள். பசிபிக்கில் பிலிப்பைன்ஸிலும் ஜப்பானுக்கு அருகிலுள்ள மற்றதீவுகளிலும் நேசதேச முன்னேற்றம் நடைபெறுகிறது. நேசதேசப்படைகள் போர்னியோவில் இறங்கிவிட்டன. நேசதேசத்தார்களுக்கு கடல், ஆகாய ஆதிக்கம் கிடைத்துவிட்டது. ஜப்பானைச் சுற்றிலுமுள்ள சமுத்திரங்களில் ஆகாயத்திலிருந்து ஏராளமான சுரங்கவெடிகள் பாவப்படுகின்றன. ஏற்கனவே கடற்படையும் சாமான் கப்பற்படையும் முடமாக்கப்பட்டதினல் கடல்மார்க்கங்கள் மோசமாகிவிட்ட ஜப்பானுக்கு இந்த நடவடிக்கையும் அதிக சங்கடத்தைத் உண்டுபண்ணும்.

மேற்குமுனையில் போர் நின்றுவிட்டதினால் அங்கிருந்து தூரக்கிழக்குக்கு மனிதர்களும், தளவாடங்களும், விமானங்களும், கப்பல்களும், துரிதமாக அனுப்பப்படுகின்றன. வெகு சீக்கிரத்தில் கடலிலும், ஆகாயத்திலும் தரையிலும், ஜப்பான ஏராளமான படைகளை எதிர்க்கவேண்டி நேரிடும். ஜப்பானின் அதோகதி நிச்சயம். முட்டாள்தனமாக வெறிபிடித்த முறையில ஜப்பான எவ்வளவுகாலம போரை நடத்துமென்று நாம் சொல்லுவதற்கில்லை. ஆனால் தோல்வியிலிருந்து ஜப்பான் தப்பமுடியாது, என்பது நிச்சயம். இதற்கு மாறாகவும் இருக்கமுடியாது. நேசதேச கடற்படையும், விமானப்படையும் ஜப்பானியர்களுடையதைவிட சங்கியையில் மிகுதியானவை என்பதுடன் அபாரத்திறமையும் படைத்தவை. குறைந்து நஷ்டமடைந்துள்ள ஜப்பானிய சேனையின் வலிமை யாதென்று எனக்குத் தெரியவராது. ஆகிலும் நேசதேசத்தாரிடம் ஏராளமான படைகளிருக்கின்றன. மேலும் அவர்களிடம் இஷ்டப்பட்ட இடத்திலும் இஷ்டப்பட்ட சமயத்திலும் தாக்கக்கூடிய கடற்படை ஒத்தாசைக்கு இருக்கிறது. தரைப்போரிலும், நேசதேசப்படைகள் ஜப்பானியர்களைவிட மேன்மையானவர்களென்று ருசுச்செய்திருக்கிறார்கள். ஜப்பானையே படையெடுக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டால் நிச்சயமாக கடும்போர் நடைபெறும். நேசதேசத்தார்களுக்கு பலமான நஷ்டம் ஏற்படலாம். சைனாவிலிருந்து ஜப்பானியர்களை துரத்தியடிப்பதிலும் இந்த சிரமம் ஏற்படும். ஆகிலும் முடிவு தவிர்க்கமுடியாது. ஆகையால் ஜப்பான் இப்பொழுதே ஒரு முடிவுக்கு வந்து சரணாகதிசெய்வது புத்திசாலித்தனமாக இருக்கும். மேலும் ஜப்பான் எவ்விதம் இனிமேல் யுத்தத்தை நடத்தமுடியும். ஜப்பானின் எண்ணெய் ஸப்ளை துணிக்கப்பட்டுவிட்டது. ஜப்பான் புதிய கடற்படையையும் விமானப்படையையும் கட்டமுடியாது. அவ்விதம் செய்வது என்று வைத்துக்கொண்டாலும், அதற்குக்காலம் போதாது. தளவாடங்கள் கிடைக்காது,

3. எதிர்காலம் மிகவும் பிரகாசமாக இருக்கிறது. அநேக காலமாக நேசதேசங்களுக்கு இடைவிடாது தொடர்ச்சியாய் வெற்றி கிடைத்துவந்திருக்கிறது. சமீபகாலத்தில் எதிர்பார்த்ததற்குமேல் வெற்றிகிடைத்திருக்கிறது. இப்பொழுது ஜெர்மனி பூராவாக சரணாகதி செய்துவிட்டது. வெற்றி சமீபித்துவரும் தருவாயில் ஜனாதிபதி ருஸ்வெல்ட் நமது மத்தியிலிருந்து மறைந்துவிட்டார் என்பது துக்கிக்கககூடியதாகும். அவர் ஒரு பிரசித்திபெற்ற ராஜதந்திரி. இந்த யுத்தத்தில் நேசதேசத்தாருக்கு அவர் பேருதவி செய்திருக்கிறார். அவர் ஜீவித்திருந்தால் சமாதான காலத்தில் தோன்றும் அநேக சிக்கலான பிரச்னைகளைத் தீர்க்கவும் அவர் அபாரமான ஒத்தாசை செய்திருப்பார். ஆனால் யுத்தம் இன்னும் முடிந்தபாடில்லை. ஜெர்மனி சரணாகதிசெய்துவிட்டது. ஆகிலும் சகலவிதமான நாசவேலைகளுடன் கிழக்குப்பான்போரை ஜெர்மனி நடத்த முயலாதாவென்று சொல்லுவதற்கில்லை. ஜப்பானை முறியடிக்க இன்னும எவ்வளவுகாலம் பிடிக்குமென்று சொல்லுவதற்கில்லை. அதைப்பற்றி இனிக்கவலைவேண்டாமென்று எண்ணாதீர்கள். போர்முனையில் உள்ளவர்களுக்குக் கடும்போரும், வீட்டில் உள்ளவர்களுக்குத் தந்நலம் மறுத்தலும், இருந்தேதீரும். ஆனால் முடிவில் நமக்கு வெற்றி நிச்சயம். நேசதேசக்கக்ஷியின நோக்கங்களைப்பூர்த்திசெய்து வைப்பதில் நாம் ஒவ்வொருவரும் நமது கடமைகளை செய்துகொண்டே வருவோமாக. ஜப்பானியர்களை தோற்கடித்துவிட்டாலும் உடன்காலத்திலேயே எல்லாம் சாதாரண நிலைமைக்கு வந்துவிடுமென்று நீங்கள நினைக்கக்கூடாது. அப்படி வராது. அதற்கு அநேக வருடங்கள் ஆகும். விஷமப் பிரசாரங்களையும், அநியாய லாபம் சம்பாதிப்பதையும் சேமித்து வைத்தலையும் நாம் ஒவ்வொருவரும் அடக்க முயற்சி எடுக்கவேண்டும். இவற்றை பொது ஜனங்கள்தான் அடக்கமுடியும். பொதுஜன ஒத்துழைப்பில்லாமல் சில உத்தியோகஸ்தர்கள் மட்டும் என்ன செய்யமுடியும? உணவுப்பொருள்கள் உற்பத்தியைப் பெருக்கலாம். அதிக உணவுப் பொருள்களை உண்டாக்குவதில் நாம்மெடுத்த முயற்சிக்கு ஸமஸ்தானத்தில் நல்ல பலன் கிடைத்திருக்கிறது. சென்ற இரண்டு பஸலிகளிலும் 47,000 ஏக்கர்கள் அதிகமாக சாகுபடிக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. உங்கள் வட்டத்தில் கூடுமானவரையில் சாகுபடியாகாத நிலங்களேயில்லை. யுத்தக்கடன் பத்திரங்களிலும், ஸேவிங்ஸ் சர்டிபிகேட்டுகளிலும் உங்கள் பணத்தைப்போட்டு வைக்கலாம். இதிலும் நமது ஸமஸ்தானத்தில் திருப்தியான அளவு நடந்திருக்கிறது. இப்போது வெளியிடப்படும் சிறுசேமிப்பு நிதியை உங்கள் கவனத்துக்கு எடுத்துக்கொள்ளும்படி சிபார்சு செய்கிறேன். தேசீய யுத்த முன்னணியில் அதைப்பற்றி விவரமாகச் சொல்லுவார்கள். அந்த நிதியும் நன்றாய் வளர்ந்து ஸமஸ்தான ஜனங்கள் அதில் 1,48,701 ரூபாய்கள் போட்டிருக்கிறார்கள். இது விஷயத்தில் ஏம்பல் வட்டத்தில் 5,000 ரூபாய்கள் போட்டிருக்கிறார்களென்று கேட்க சந்தோஷப்படுகிறேன்.

உங்களுடைய சொந்த செலவில் நீங்கள் செட்டாய் இருக்கவேண்டும். கலியாணங்களிலும் இவைபோன்ற மற்ற வைபவங்களிலும் ஆடம்பரச்செலவுசெய்ய இது காலமல்ல. லாடங்களேயும், தள்ளுபடி காகிதங்களையும் பொறுக்கிக்கூட நீங்கள் யுத்தத்திற்கு உதவி செய்யலாம். அப்படி உதவி புரிபவர்களுக்கு ஸர்க்காரில் பணம் கொடுக்கிருர்கள். வேறு உதவி செய்யாவிட்டாலும் காலம் கெட்டிருக்கும் சமயத்தில் சந்தோஷமாயிருந்தால் போதுமானது. இதைவிட்டு தன்காரியமே பெரிது என்று நினைப்பவர்களாயினும் இப்போது அவர்கள் பணத்தைச் செலவு செய்தால் சாமான் விலை மிகுதியால் பணத்திற்கு சரியான பொருமதி கிடைக்காது. பணத்தை இப்போது சேமித்து வைத்து வட்டிக்குப்போட்டு யுத்தத்துக்குப்பிறகு செலவு செய்தால் உங்களிடத்தில் அதிகப்பணம் இருக்கும். அந்தப் பணத்திற்கு அதிகப்பொருளும் வாங்கலாம் இவ்வழிகள் ஒவ்வொன்றிலும் நம்மில் ஒவ்வொருவரும் ஏதேனும் எவ்வளவு அற்பமாயினும் செய்யலாம். அவ்விதம் செய்தால் எந்த வெற்றியும் அமைதியும் கிடைக்கவேண்டுமென்று நாமெல்லோரும் விரும்பித்துதி செய்து வருகிருேமோ அந்த வெற்றியும் அமைதியும் விரைவில் வந்து எய்தும்.

---

## வார யுத்தச் செய்திகள்.

### (A)-முக்கியமான சம்பவங்கள்.

| | |
|---|---|
| 23—5—45 (புதன்கிழமை). | கூட்டு நிர்வாகத்தின் பிரதம மந்திரியான மிஸ்ட்டர் சர்ச்சில் ராஜிஞமாச் செய்தார். |
| 24—5—45 (வியாழக்கிழமை). | ஐரோப்பாவின் துராத்மாவான ஹிம்லர் இறந்தான். |
| 26—5—45 (சனிக்கிழமை). | மிஸ்ட்டர் சர்ச்சில் புதிய நிர்வாகத்தை அமைத்தார். |
| 27—5—45 (ஞாயிற்றுக்கிழமை). | சீனப்படைகள் தென் மேற்கு சைனுவிலுள்ள நானிங்கைப் பிடித்தன. ஸிரியாவின் நிலமை மோசமாகிறது. |
| 29—5—45 (செவ்வாய்க்கிழமை). | யோகஹாமா நகரம் தீப்பற்றி எறிகிறது. |
| 30—5—45 (புதன்கிழமை). | ஸிரியாவில் பிரெஞ்சு, ஸிரியாத் துருப்புகள் கைகலந்தன. |

### (B)-செய்திச் சுருக்கம்.

---

**ஐரோப்பா.—**

(1) பெலோயனில் இருந்த ஜெர்மன் காவல்கூடம் பொசுக்கப்பட்டது.

(2) ஹாஹா பிரபு என்று சொல்லப்படுபவரும் பிரிடிஷ் ராஜத்துரோகியுமான வில்லியம் ஜாய்ஸ் கைது செய்யப்பட்டான்.

(3) பிரிடிஷ் அமெரிக்க உதவிப்படைகள் இஸ்ஸான்ஸோ நதியைத் தாண்டி யூகோஸ்லாவியர்கள் பாத்தியம் கொண்டாடிய பிரதேசத்திற்குக் கொண்டுபோகப்பட்டன.

**பசிபிக்.—**

(1) ஆகினவாவிலுள்ள அமெரிக்கப்படைகள் டோர்மாகியையும், சுகார்லோப் குன்றையும் பிடித்துவிட்டன. ஷூரியை சுற்றி வலைத்தன. ஜப்பானியர்கள் அரண்களை விட்டகன்ருர்கள். ஆகினவா போர் முடிந்துவிட்டது.

(2) விமானங்களில் வந்து இறங்கின ஜப்பானியப் படைகள் அமெரிக்கரிடமுள்ள கிட்டா, நாகா விமான தளங்களைத் தாக்கின.

(3) ஜப்பானிய விமானப்படை ஆகினுவாவைச் சேர்ந்த இத் தீவைச்சுற்றியுள்ள அமெரிக்கப் படைகளைத் தாக்கின.

(4) பிலிப்பைன்ஸைச் சேர்ந்த மிண்டானோவின் தலைநகரமான மாலாபாலேயும் லிங்கேஞன் விமானதளமும் பிடிபட்டன. நடவடிக்கைகள் கூடியசீக்கிரம் முடிந்துவிடும். படைகளைத் துடைக்கும் வேலை ஆரம்பமாகும்.

(5) பிலிப்பைன்ஸைச் சேர்ந்த லூஸானில் இன்பாண்டா, மிஸ்ஸிவா, சாண்டாபி பிடிபட்டன.

(6) ஆஸ்திரேலியர்கள் நியூகினியாவைச் சேர்ந்த வேவாக்கிலுள்ள கேப் மேயம்மை அடைந்தார்கள்.

(7) போகன்வில்லியில் போரோரி நதி தாண்டப்பட்டது.

**ஜப்பான்.—**

இந்த வாரத்தில் டோக்கியோ, யோகஹாமா, கோப், ஒஸாகா முதலிய இடங்கள் வெடிகுண்டுகளால் பலமாகத் தாக்கப்பட்டன.

**சைனு.—**

ஹோனுன், ஹூபுனன், ஹ்யூபே மாகாணங்களில் ஜப்பானியப் பிற்போக்குத் தொடர்ச்சியாக நடந்துவருகிறது. சீனர்கள் லியர்காங்க், சியான், ஹவையுவாங்கன், நானிங் முதலியவற்றைப் பிடித்தார்கள்.

**பர்மா.—**

தெற்கு பர்மாவிலுள்ள பாஸீனும், பெகுவிற்கு வடமேற்கிலுள்ள மாக்ஷிட்வாவும் விழுந்துவிட்டன. 14-வது சேனையின் வளையத்திலிருந்து தப்பித்துக்கொள்ள மத்ய பர்மாவில் ஜப்பானியர்கள் படைகளை திருத்தியமைத்து வருவதாகச் சொல்லப்படுகிறது.

---

## சத்துருவினுடையவும், சத்துருவினுல் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

**21—5—45** (திங்கட்கிழமை.)

தூரக்கிழக்கு (Far East),

இலக்குகள்.—ஸாகாஷிமா (Sakashima) தீவுகள்.

ஜப்பானிய சைனியங்கள்.—ரியூக்ஸிலுள்ள ஆகினுவா (Okinawa).

**பர்மா (Burma).**

ஒரு தகவலும் இல்லை.

**22—5—45.** (வெள்ளிக்கிழமை).

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானிய இலக்குகள்.—குயுஷு (Kyushu).

ஜப்பானியக் கப்பல்கள்.—யாங்ட்ஸ (Yangtse), and ஸியாங் (Siang) நதிகள்.

**பர்மா (Burma).**

5 பாலங்கள் —பாங்காக் (Bangkok), ஸிங்கப்பூர் (Singapore).

ரயில்வே ஸ்டேஷன்.—யி (Ye).

ஜப்பானிய விமான நிலயங்கள்.—தென்பர்மா (S. Burma).

எதிரித் துருப்புகள்.—தாஸி (Thazi), ஸியாம் (Siam) தற்காப்பு பாதைகள்.

**23—5—45.** (புதன்கிழமை).

தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

**பர்மா (Burma).**

கிழக்கு விமான தளங்களினின்றும் விமான நடவடிக்கைகள் நடத்தமுடியாதபடி கால நிலை தடுத்துவிட்டது.

**24—5—45** (வியாழக்கிழமை)

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானிய இலக்குகள்.-டோக்கியோ (Tokyo).

ஜப்பானிய சைனியங்கள்.—ஒகினுவா (Okinawa).

சுரங்கவெடி பாவுதல்.-கான்மான் (Kanmon) ஜலசந்தி.

**பர்மா (Burma).**

கப்பற் கட்டும் துறைகள்.—சிங்கப்பூர் (Singapore).

**25—5—45.** (வெள்ளிக்கிழமை).

தூரக்கிழக்கு (Far East).

விமான நிலயங்கள்.—ஆகினுவாவில் உள்ள கிதா (Kita), and நாகா (Naka).

எதிரிக் கப்பல்கள்.—ஜப்பானுக்கடுத்துள்ள கீரில்.

பர்மா (Burma).
ஒரு தகவலும் கிடைக்கவில்லை.

25—5—45 (சனிக்கிழமை).

தூரக்கிழக்கு (Far East).
ஜப்பானிய இலக்குகள்.—டோக்கியோ (Tokyo).
விமான நிலையங்கள்.—காண்டானுக்கு (Canton) அருகில.
ஸ்டோர்ப் பிரதேசங்கள், கப்பல்கள்—ஷாங்ஹாய் (Shanghai).

பர்மா (Burma).
இலக்குகள்.—ஸியாம் (Siam).

27—5—45. (ஞாயிற்றுக்கிழமை).

தூரக்கிழக்கு (Far East.)
விமான நிலையங்கள்.—க்யுஷூ (Kyushu) தீவுகள்.

பர்மா (Burma).
ரயில்வே.—மாக்பாலினுக்கும் (Mokpalin), சிங்கப்பூருக்கும் (Singapore) இடையில்.

28—5—45. (திங்கட்கிழமை).

தூரக்கிழக்கு (Far East).
விமான நிலையங்கள்.—டோக்கியோ (Tokyo).

பர்மா (Burma).
சியங்மாரி விமான நிலையம்.—ஸியாம் (Siam).
பெரும் ரஸ்தாக்கள், ஸ்தாபனங்கள்.—ஸியாம் (Siam).

29—5—45. (செவ்வாய்க்கிழமை).

தூரக்கிழக்கு (Far East).
ஜப்பானியத் துறைமுகம்.—யோகாஹாமா (Yokohama).
ஜப்பானிய சைனியங்கள்.—ஆகினுவா (Okinawa).

பர்மா (Burma).
ஜப்பானிய முகாம்கள்.—மோல்மீன் (Moulmein).
விமான நிலையங்கள்.—ஸியாம் (Siam).

30—5—45. (புதன்கிழமை)

தூரக்கிழக்கு (Far East).
ஒரு தகவலும் இல்லை.

பர்மா (Burma).
கட்டடங்கள், துருப்பு முகாம்கள்.—மோல்மீன் (Moulmein).

## *ஜப்பான் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.*

22—5—45. (செவ்வாய்க்கிழமை).
to
26—5—45. (சனிக்கிழமை).

தூரக்கிழக்கு (Far East).
ஒரு தகவலும் இல்லை.

பர்மா (Burma).
எதிரி விமான நடவடிக்கைகள் இல்லை.

27—5—45 (ஞாயிற்றுக்கிழமை).
to
29—5—45. (செவ்வாய்க்கிழமை).

தூரக்கிழக்கு (Far East).
நேசதேச சைனியங்கள்.—ஒகினுவா (Okinawa).

பர்மா (Burma).
எதிரிவிமான நடவடிக்கைகள் இல்லை.

30—5—45. (புதன்கிழமை).
to
31—5—45. (வியாழக்கிழமை).

தூரக்கிழக்கு (Far East) பர்மா (Burma).
ஒரு தகவலும் இல்லை.

# யுத்தக் குறிப்புகள்.

**ஐரோப்பாவில் யுத்தத்துக்குப்பின்.** மேற்பார்வை கமிஷன் பிளின்ஸ்பர்க் என்ற ஜெர்மன் துறைமுகத்தில் ஜெர்மன் வசமிருந்த பாக்கியுள்ள 6 சதுர மைல்களைப் பிடித்து ஜெர்மன் நிர்வாகம், ஜெர்மன் ராணுவ அதிகாரிகள் எல்லோரையும், முக்கியமாக டோனிட்ஸ், ஜோடில், ஸ்பியர், ஸெட்ஷூவேரி பிரபு முதலியவர்களையும் கைதி செய்தது. ஜெர்மனிக்கு வெளியிலுள்ள ஜெர்மன் ஸ்தானீகர்களும் சரணடைந்து வருகிறார்கள். நான்கு சேனைத்தலைவர்களான ஈஸன் ஹவர், மாண்ட்காமரி, ஸூகாவ், கோனிக் முதலியவர்கள் அங்கத்தினர்களாக உள்ள ஐரோப்பிய ஆலோசனைக்கமிஷன் அமைக்கப்பட்டிருக்கிறது. ஆகிலும் அதன் கொள்கைகளும் திட்டங்களும் இன்னும் விவரிக்கப்படவில்லை. ருஷ்ய ஆதரவின் பேரில் அமைக்கப்பட்ட ரென்னர் நிர்வாகம் ஆஸ்திரியாவில் இருந்து வருகிறது. அங்கு வெகு சீக்கிரத்தில் நான்கு வல்லரசுக் கமிஷன் ஸ்தாபிக்கப்படும். ஜெர்மனியை நிராயுதபாணியாக்குவது நடைபெற்று வருகிறது. தேசப்பிரஷ்டம் அடைந்தவர்களையும், கைதிகளையும், திருப்பி அனுப்புவது யாதொரு சிரமமன்னியில் நடைபெற்று வருகிறது. ஜெர்மன் பொதுமக்கள் ஆச்சரியப்படத்தக்க முறையில் ஆக்கிரமிப்பு அதிகாரிகளுக்குக் கீழ்படிந்து வருகிறார்கள்.

ஆகிலும் கீழறுப்பான் இயக்கம் அற்றுப்போகவில்லை என்ற பீதி இருந்து வருகிறது. ருஷ்ய ஜெர்மன் போர்முனையில் சில இடங்களில் ஜெர்மன் கொரில்லாப்படைகள் காடுகளில் ஒளிந்து கொண்டு பழிவாங்கும் உணர்ச்சியுடனும் பசிக் கொடுமையாலும் போரை நடத்த முயலு கிறார்கள. நாஸி நிர்வாகத்துக்குப் பதிலாக நிருதியான நிர்வாகம் இன்னும் அமைக்கப்பட வில்லை. நாஸிக்கட்சியைச் சேர்ந்தவர்கள் இப்பொழுது இல்லாவிட்டாலும் எதிர் காலத்திலா வது திரும்பி வந்து விடலாம் என்று நம்பியிருக்கிறார்கள். ஐரோப்பாவில் சமாதானம் ஏற் படுவதற்கு நேசதேசத்தார்கள் மிகவும் சிரமமான வேலையை மேற்கொள்ள வேண்டும்.

வி வி வி வி வி

**தற்கொலைகள்.** இந்த நடவடிக்கை ஓய்ந்துவிடவில்லை. இந்த வாரத்தில் கெஸ்டாபோவின் தலைவரான ஹிம்லர் பிடிபட்டான். ஆகிலும் அவன் விசாரணையையும் தூக்கு மேடையையும் தவிர்ப்பதற்காக பயங்காளிபோல் தற்கொலை செய்துகொண்டான். அவன் பிரிடிஷ் 2-து சேனை தலைமைக்காரியாலயத்தில் மே 21உ யன்று சரணடைந்தான். ஹிஸிங்கர் என்ற பெயருடனும் மீசையை எடுத்து விட்டும் வலது கண்ணில் வர்ணம் பூசிக்கொண்டும் பிரயாணம் செய்தவந்தான். பிரிடனின் கண் காணிப்பிலிருந்து தப்பமுடியாதென்று இறுதியில் அவன் எண்ணினான். கைதி செய்யப்பட்டபின் அவனை டாக்டர்கள் பரிசீலனை செய்தபொழுது அவன் வாயில் கண்ணாடியில் வைத்திருந்த விஷத்தை விழுங்கினான். உடனே மரணம் ஏற்பட்டது. அவனை உயிர்ப்பிக்கச்செய்த முயற்சிகளெல்லாம் வீணாகின. எதிர்கால அடையாளத்துக்காக அவனுடைய முகத்தின் பிம்பத்தைத் தயாரித்தபின் அவன் சவத்தை அடையாளமில்லாத ஒரு புதைகுழியில் தள்ளிவிட்டார்கள். இவ்விதமாக ஐரோப்பாவின் கோர புருஷனுக்கு முடிவு ஏற்பட்டது. அவனை ஐரோப்பாவின் கொலையாளி என்றும், மனித சரித்திரத்திலேயே அதிக்கிரம துன்புறுத்தும் முறைக்கு ஆசிரியரென்றும் அழைப்பது பொருத்தம்தான். கோயரிங் நிர்மாணித்த காவல் கூடத்தை பரிஷ்காரம் செய்தது ஹிம்லருடைய கொடுமை களும் கொடுந்துன்பங்களும்தான். அவன் அதிகாரத்திலிருந்தபொழுது ஐரோப்பாவில் எவரும் பத்திரமாக இருக்க முடியாது. அவனுடைய சாரர் அமைப்பு விரிவானது. கடைசி நாட்களில் அவன் சூதாட்டம் ஆடுவதுபோல், நடத்தினான். பயமுறுத்துவதன் மூலமாக ஹிட்லருக்கிருந்த அதிகாரத்தைக் குறைத்துவிட்டான். அதன் பின் சிறிது காலம் ஹிட்லரின் டெபுடி ஆகவும் வாரசாகவும் நிர்வாகத்தை நடத்தினான். ஆனால் அவனுடைய அதிகார காலம் நீடித்திருக்கவில்லை. மே 6உ யன்று டோனிப்ஸ் அவனுடைய நிர்வாகத்தில் ஹிம்லரைச் சேர்த்துக்கொள்ளவில்லை. ஜெர்மானியர்கள் மேற்கு முனையில் மட்டும் நிபந்தனையற்ற சரணாகதி செய்யவேண்டும் என்று அவன் பகிரதப்பிரயத்தனம் செய்தான். ஆனால் ஒன்றும் ஹிம்லருக்கு பத்திரமான ஸ்தானத்தைத்தரவில்லை.

வி வி வி வி வி

**விட்கன் குவிஸ்லிங்கின் விசாரணை** ஆரம்பமாகிவிட்டது. அவன்பேரில் ஐந்து குற்றங்கள் சாட்டப்பட்டிருக்கின்றன. ஜெர்மனிக்கு உதவி செய் தது, நேசதேசத்தார்களை எதிர்த்தது, நார்வீஜிய பொதுஜன கிரிமினல் சட்டங்களை மீறியது, ஜெர்மனிக்கு அடிமை வேலை செய்ய மறுத்த நார்வீஜிய ஸ்திரீகளைக் கைது செய்ய மறுத்த நார்வேயின் போலீஸ் அதிகாரியின் மரணத்திற்கு உடந்தையாக இருந்தது. குவிஸ்லிங்கின் எதிர் வாதம் யாதெனில் ஜெர்மானியர்கள் வந்தபொழுது ஆஸ்லோவில் தன்னைத் தவிர வேறொரு அதிகாரியில்லை என்றும் ஆகையால்தான் நிர்வாகத்தை நடத்தும்படி நேரிட்டது என்பதும். விசாரணை ஆகஸ்ட் மாதத்தில் மறுபடி நடைபெறும்.

வி வி வி வி வி

**கூட்டு நிர்வாகம்.** பிரிடனில் கூட்டு நிர்வாகம் மே 23உ யன்று மறைந்தது. விசனிக்கத்தக்கதாக இருந்தாலும் அதன் மறைவு எதிர்பார்க்கப்பட்டதுதான். பிரிடனையும் சாம்ராஜ்யத்தையும் ஆபத்திலிருந்து காப்பாற்றி வெற்றியைச் சம்பாதித்த பிரிடிஷ் கட்சிகளின் ஒத்துழைப்பு அதிககாலம் நீடித்திருக்காது என்ற சமீப காலத்தில் தோன்றிற்று. கூட்டு நிர்வாகத்துக்கு தொழிற்கட்சியிடமிருந்து தோல்வி ஏற்பட்டது. கடைசித் தருவாயில் சர்ச்சில் ஜப்பானை முறியடிக்கும் வரையில் கூட்டு நிர்வாகம் இருக்கவேண்டுமென்று யோசனை கூறினார். தொழிற்கட்சி அக்டோபரில் பொதுத் தேர்தலை நடத்தவேண்டுமென்று வற்புறுத்தியது. தேர்தல் இப்பொழுது அவ சியமா என்பதைப்பற்றி பொதுஜனங்களின் வாக்கெடுக்க வேண்டும் என்று சர்ச்சில் மறுபடி யும் சொன்னார். இது நாஸி முறையைக் கையாளுவதுபோல் என்று தொழிற்கட்சி கூறிற்று.

பிளாக்பூரில் கூடின ஆயிரம் தொழில் பிரதிநிதிகள் பிரதம மந்திரியின் யோசனையை நிரா கரித்தனர். அதன்பின் சம்பவங்கள் வேகமாக நடைபெற்றன. சண்டையை முற்றவிடாமல் இருப்பதற்காக சர்ச்சில் ராஜிநாமா செய்தார். அதனால் கூட்டு நிர்வாகம் முடிவு பெற்றது. முன் அனுபவத்தை ஒட்டி மன்னர்பிரான் சர்ச்சிலை காமன்ஸ் சபையின் மிகப்பெரிய கட்சி யின் தலைவர் என்ற ஹோதாவில் கான்ஸர்வேடிவ் நிர்வாகத்தை அமைக்கும்படி வேண்டிக் கொண்டார். அவரும் இடைகால நிர்வாகத்தை அமைத்தார். ஜூன்மீ 15உ யன்று பார்லிமெண்டு கலைக்கப்படும். பிரிடனில் ஜூலை 5உ யன்று தேர்தல் நடைபெறும். யுத்த அரங்கங்களிலுள்ள பிரிடிஷ் வாக்காளர்களுக்கு ஓட்டுக்கொடுக்கும் பேப்பர்கள் விமான மூலம் அனுப்பப்பட்டு திரும்பிக்கொண்டு வரப்படும். தேர்தலின் முடிவு ஜூலை 27உ யன்று வெளியிடப்படும்.

கூட்டு நிர்வாகம் திடீரென்று மறைந்தாலும் அதன் முக்கியத்துவம் குறைந்துவிடாது. பிட் சொல்லுவதுபோல் பிரிடன் கூட்டு மந்திரி சபையை ஒருபொழுதும் ஆதரித்ததில்லை. ஆகிலும் இந்தக் கூட்டு நிர்வாகம் இருந்தவரையில் கடமையில் அதற்கு இருந்த பக்தியும், லக்ஷியத்தில் அதற்கிருந்த உறுதியும், தலைவரிடம் அதற்கு இருந்த விசுவாசமும் குறிப்பிடத் தக்கவை. சர்ச்சிலின் பாராட்டு யுக்தமானது. அவர் சொல்லுகிறார், "அதன் முயற்சியினால் தான் பிரிடன் ஸ்வஸிக்க ஆரம்பித்து பிழைத்திருந்து இறுதியில் தாக்க முடிந்தது". யுத்த ஆரம்பத்தில் இந்த மந்திரி சபையை சேம்பர்லின் கூட்டினார். நார்வே போருக்குப் பிறகு அதற்கு சர்ச்சில் புத்துயிர் அளித்தார். ஐந்து வருஷமாக அது அநேக கஷ்டங்களை அனுபவித்து திறமையுடன் வேலை செய்து ஐரோப்பியப் போரில் வெற்றி பெற்றது. ஜப்பான் முறியடிக்கப்பட்டு சமாதானம் ஏற்படுவதற்கு முன்னதாக அது கலைந்தது வருந்தத்தக்கது. மிஸ்டர் சர்ச்சில் பின்வருமாறு சொல்லுகிறார்:—"சரித்திரத்திலேயே அபூர்வமாக காணக் கூடிய மாத்ஸர்யங்களும் வெறுப்பும் உள்ள சிதைவுபட்ட ஐரோப்பா இங்கிலாந்தின் முன் நிற்கிறது.

கூட்டு நிர்வாகம் முடிந்தாலும் பிரிடனின் கொள்கையில் மாறுதல் ஏற்படவில்லை. கூட்டு, கான்ஸர்வேடிவ், தொழிற்கட்சி, ஆகிய எந்த நிர்வாகம் இருந்தாலும் ஜப்பானை முறியடிப் பதும் ஐரோப்பாவிலும் உலகத்திலும் நேர்மையைத் திரும்பவும் அமைப்பதும்தான் பிரிடனின் முக்கியமான லக்ஷியங்கள். சர்ச்சில் அமைத்திருக்கும் இடைக்கால ஸர்க்காரில் தைரியமும் எதிர்கால பிரயாசைக்குரிய சக்தியும் போதுமான அளவு இருக்கின்றன. அதில் திறமை வாய்ந்தவர்கள் இருக்கிறார்கள். மறுபடியும் கான்ஸர்வேடிவ் கட்சி அதிகாரத்துக்கு வந்தால் தேசீய அபிவிருத்தி சம்பந்தமான நீண்ட காலத்திட்டங்களை அவர்கள் நிறைவேற்றக் கூடும். எந்த நிர்வாகம் வந்தாலும் பிரிடனின் அயல்நாட்டுக் கொள்கை மாறாது. எல்லாக் கட்சிகளும் இதை ஆதரிக்கிறார்கள்.

வி வி வி வி வி

**சான் பிரான்ஸிஸ்கோ மகாநாடு.** இது முடிவுபெறும் தருவாயில் இருக்கிறது. மேமீ 29உ ஒலிபரப்பியில் அமெரிக்க காரியதரிசியான மிஸ்டர் எட்வர்ட் ஸ்டெட்டினஸ் பின்வருமாறு சொன்னார்:—"உலக சமாதான சாஸனத்தின் கடைசி அத்தியாயம் எழுதப்படுகிறது. அங்கத்தினர்களாக உள்ள நாடுகளின் நிர்வாகங்கள்தான் அதை ஊர்ஜிதம் செய்யவேண்டும். இப்பொழுது அமைக்கப்பட்ட உலக ஸ்தாபனம் அக்கிர மப்போரைத் தடுக்கவும் உலகம் பூராவும் பொருளாதார ஜனசமூக வசதிகளை அபிவிருத்தி செய்யவும் பலமுள்ளதாக இருக்கும்." வல்லரசுகளுக்கிடையே தோன்றும் வித்தியாசங்கள் ஒன்றன்பின்னொன்றாய் அகற்றப்படுகின்றன. ஆகிலும் போலிஷ் பிரச்னையும் டிரிஸ்டி பிரச்னையும் தீர்க்கப்படவில்லை.

வி வி வி வி வி

**லெவாண்ட்.** லெவாண்டில் பிரான்ஸ் புதியபடைகளை இறக்கியதால் சிரியாவிலும், லெபானிலும் குழப்பத்தை அதிகரித்து வருகிறது. ராஜதந்திர, பொருளாதார, கலைஞான காரணங்களைக்கொண்டு இந்த நடவடிக்கை நியாயமானதென்று டிகால் சொல்லுகிறான். ஆகிலும் தூரக்கிழக்குப் போர் பாக்கியிருக்கும் போது மத்தியகிழக்கில் சட்டத்தையும் ஒழுங்கையும் பரிபாலிப்பது அவசியமென்பதை அவன் மறந்துவிட்டான்போலும். அரபுநாடுகள் லெவாண்டின் கட்சியை ஆதரித்து பிரான்ஸை எதிர்த்துப்போராடுவதாகச் சொல்லிவிட்டன. நிலைமை மோசமாகி வருகிறது. பிரிடன் குறுக்கிட தயங்கி நிற்கிறது. ஆகிலும் அவசியம் ஏற்படும்பொழுது அது குறுக்கிடத்தயாராக இருக்கும்.

**தூரக்கிழக்கு.** ஐரோப்பாவிலும் சமீபக்கிழக்கிலும் யுத்தத்துக்குப்பின் தேசப் பேராசை இருந்துவரும்பொழுது அக்கிரமப் போரையும் கொடுங்கோன்மையையும் ஒழிப்பதற்கான போர் தூரக்கிழக்கில் ஆரம்பமாகிவிட்டது. படைகள் பூராவும் இன்னும் வந்துசேரவில்லை. ஆகிலும் வெகு சீக்கிரத்தில் ஜப்பானியர்கள் நேசதேசத்தாரின் மூவகைத் தாக்குதல்களை அனுபவிப்பார்கள். குத்தகைக் கடன் ஒத்தாசையைப்பற்றி மிஸ்டர் ட்ரூமேன் வெளியிட்டுள்ள ரிபோர்ட்டில், ஐரோப்பிய யுத்தம் முடிந்தபின் தூரக்கிழக்குக்கு அனுப்பப்படும் ஸப்ளைகள் அதிகரித்துவிட்டதென்று காணப்படுகிறது. நேசதேசத்தாரிடம் இப்பொழுதுள்ள குறைவான ஸப்ளைகளைக்கொண்டே அவர்கள் ஜப்பானியத் தற்காப்புகளின் வட்டாரத்தை ஊடுருவிச் சென்று எதிர்காலத் தாக்குதல்களுக்கு தளங்களை அமைத்துவிட்டார்கள். இனிமேல் பிரிடன், அமெரிக்கா, பிரான்ஸ், சைனா, ஹாலந்து, கிரீஸ், கனடா முதலிய நாடுகளின் ஐசுவரியங்கள் குவிக்கப்படும். இந்தியா ஒரு பெரிய ஆயுதசாலையாக மாறிவிட்டது. சைனாவுக்கு பழைய பர்மா ரஸ்தா மூலமாகவும் புதிய ஸ்டில்வெல் ரஸ்தாமூலமாகவும் தளவாடங்கள் அனுப்பப்படுகின்றன.

ஒரு வருஷத்துக்குமுன் நார்மண்டியில் படைகளை இறக்கியதைவிட அதிகமாகவே ஐரோப்பாவிலிருந்து நேசதேசத் துருப்புகள் தூரக்கிழக்குக்கு அனுப்பப்படுகின்றன. அடுத்துவரும் மாதங்களில் ஜெனரல் ஈசன்ஹவரிடமுள்ள அமெரிக்கப் படைகளின் பெரும் பாகம் அதாவது 3 மிலியன், ஜெனரல் மாக் ஆர்தரின் கமாண்டுக்குட்பட்டுவிடும். ஏராளமான கப்பல்களில் பிரிடிஷ் படைகள் தென்கிழக்கு ஆசியா கமாண்டுக்கு அனுப்பப்படுகின்றன. ஜப்பானுடன் போர் கடுமையாக நடைபெறவேண்டும். ஏனெனில் எதிரியிடம் 4 மிலியன் துருப்புகளிருக்கின்றன. நேசதேசத்தார்கள் ஜப்பானின் பெரும்படையை இன்னும் சந்திக்கவில்லை.

வி வி வி வி வி

**தூரக்கிழக்குப் போரின் தன்மை.** அதிகரித்துவிட்டது. பர்மாவிலுள்ள ஜப்பானியப் படைகள் சின்னாபின்னம் செய்யப்பட்டிருக்கின்றன. எஞ்சியுள்ளவர்கள் ஷான்நாடுகள் வழியாக ஸியாமுக்குத் தப்பிஓட முயலுகின்றார்கள். நேசதேசப்படைகள் அவைகளைத் துரத்திச் செல்லுகின்றன. பிரிடிஷ் படைகள் ஜப்பானிய ஸமக்ஷேம வட்டாரத்திலுள்ள அந்தமான்ஸ், மலாக்கா ஜலசந்தி, போர்னியோ முதலிய இடங்களில் தாக்கியிருக்கின்றன. ஸர் ப்ருஸின் கடற்படையைச் சேர்ந்த விமானந்தாங்கிகளில் சென்ற விமானங்கள் மலேயாவுக்கு வடக்கிலும், பார்மோஸாவையும் சீனக்கடலையும் நோக்கியுள்ள சாகிஷிமாத்தீவிலும், ஜப்பானிலும் குண்டுகளை வீசுகின்றன.

வி வி வி வி வி

**சீனாவிலுள்ள ஜப்பானியப் படைகள்.** ஹோனான், ஹூனான், ஹூபெ மாகாணங்களில் தொடர்ச்சியாகத் தோல்விகள் கிடைத்ததனால் ஜப்பானியர்களின் வீரம் அழிந்துவிட்டது. நேசதேசப் படையெடுப்பு பீதியினால் ஜப்பானியர்கள் சீனக் கடற்கரையிலுள்ள தற்காப்புகளை பலப்படுத்திவருகிறார்கள். பூசௌ துறைமுகத்தையும் நானிங் நகரத்தையும் இழந்தபின் சீனாவில் ஜப்பானின் நிலைமை அதிக பலஹீனமடைந்துவிட்டது.

வி வி வி வி வி

**விமான நடவடிக்கை.** அமெரிக்க விமானங்களின் குண்டுவீச்சு அதிகரித்துவிட்டது. ஏராளமான விமானங்கள் கனமான வெடிகுண்டுகளைப் போடுகின்றன. ஜப்பானிய நகரங்களும், தொழிற்சாலைகளும் சாமான் கிட்டங்கிகளும் இடைவிடாது தாக்கப்படுகின்றன. இந்த வாரத்தில் 8,500 டன்கள் எடையுள்ள எறிவெடிகளின் சேஷ்டையால் டோக்கியோவில் 35 சதுர மைல்கள்கொண்ட பிரதேசமும் சக்ரவர்த்தியின் வாசஸ்தலமும், ஜனபிரதிநிதியின் கட்டடமும் சாம்பலாகிவிட்டன. இது 48-மணி நேரத்திற்குள் நடைபெற்றது. இதற்கு பரிகாரமாக, ஜப்பான் விமானம் சுடும் பீரங்கிகளையும், தேடு விளக்குகளையும், சண்டை விமானங்களையும், விமான சுரங்க வெடிகளையும், அவுட் வாணங்களையும், பறக்கும் வெடிகுண்டுகளையும், மற்றும் சில ரகசிய ஆயுதங்களையும் அதிகரித்திருக்கிறது.

இது ஆரம்பம்தான். அமெரிக்க சேனை டெபுடியான ஜெனரல் மார்ஷல் அமெரிக்க காங்கிரஸ்காரரின் கமிட்டியில் பின்வருமாறு பேசினார்:—"கூடிய சீக்கிரத்தில் ஐரோப்பிய யுத்த முடிவு காலத்தில் ஜெர்மனிபேரில் போடப்பட்டதைவிட 2½ மடங்கு அதிகமான வெடி குண்டுகள் ஜப்பான்பேரில் அடுத்துவரும் பன்னிரண்டு மாதங்களுக்குள் போடப்படும்."

வி வி வி வி வி

**தற்கொலை தந்திரம்.** ஜப்பானிலிருந்து விமான மூலம் அரைமணியில் செல்லக் கூடியதும் ரையூகியூஸ் தீவின் வடக்குகோடியுமான அமெரிக்கன் தீவுக்கருகில் அமெரிக்க கடற்படைகள் வருகின்றன. அந்தத் தீவைப்பிடித்து ஆகினாவாவுடன், அந்த ஜப்பானைத்தாக்க மற்றொரு தளமாக உபயோகிப்பதென்று அமெரிக்கா உத்தேசித்திருக்கிறது. ஆகினாவாவின் வீழ்ச்சி வெகு சீக்கிரத்தில் ஏற்படும். இந்தத் தீவைக் காப்பாற்ற ஜப்பான் நேசதேசக் கடற்படையை பலமாகத்தாக்கி வருகிறது. சமீப காலத்தில் தற்கொலை வெடி விமானங்களையும் "பெல்லி" படைகளையும் உபயோகித்து ஆகினாவாவைச்சுற்றி 81 மணி நேரம் ஜப்பான் நடத்திய போரில் 11 உயர்தர அமெரிக்கக்கப் பல்கள் நாசமாகின. ஜப்பான் 111 விமானங்களை இழந்தது. இந்த நடவடிக்கைகள் தொந்திரவளிக்கின்றன என்பதில் சந்தேகமில்லை. ஆகிலும் அவைகள் நேசதேச நடவடிக் கையை பாதிக்கவில்லை. ஒவ்வொன்றிற்கும் பரிகாரம் இருக்கிறது. தற்கொலைத்தாக்குதல் கள் தற்கொலை விமானதளங்களையும் விமானங்களையும் விமான நடவடிக்கையாலும், கப்பல் களின் பீரங்கி பிரயோகத்தினாலும் அழிப்பதன் மூலம்சமாளிக்கப்படுகின்றன.

வி வி வி வி வி

**பலஹீனச் சின்னங்கள்.** எதிரியின் போர்சக்தி குறைந்து வருகிறதென்பதற்குச் சின்னங்கள் காணப்படுகின்றன.

(1) நாட்டின் தற்காப்புக்கும் உற்பத்திக்கும் சேனைக்கும் 20 மிலியன் மாணவர்கள் திரட்டப்படுகிறார்கள்.

(2) பர்மாவிலுள்ள ஜப்பானியர்கள் போர் புரியும்படி பெண்களை கட்டாயப்படுத்து கிறார்கள். ஆகினாவாப் போரில் அமெரிக்க ஆடைகளையும் ஆயுதங்களையும் ஜப்பானியர்கள் உபயோகித்து வருகிறார்கள்.

(3) ஆகினாவாவில் அமெரிக்கப்படை வரிசைகள் வழியாக திருட்டுத்தனமாக நுழையப் பார்க்கிறார்கள். வெடிகுண்டுகளைக்கட்டிக்கொண்டு அமெரிக்க டாங்கிகளுக்கடியில் நுழைந்து அவைகளை அழிக்க முயன்று வருகிறார்கள்.

(4) ஜெர்மானியர்களைப்போல வடக்கு அமெரிக்காவின் மேற்கு பாகத்தை புகைக் கூண்டுகளில் வெடிகுண்டுகளை அமைத்து ஓட்டியில்லாமலும் கட்டுப்பாடில்லாமலும் அவைகளை அனுப்பித்தாக்க முயன்று வருகிறார்கள்.

---

## ஜெர்மனியை எவ்விதம் நடத்துவது.

### ஐரோப்பிய சமாதானப் பிரச்னைகள்.

**(மாஞ்செஸ்டர் கார்டியனின் ராஜதந்திர நிருபர்).**

ஜெர்மானியர்கள் ஒரே ஒரு தெய்வத்தைத்தான் ஆராதிக்கிறார்களென்றும், அது மிருத்யு தேவதைதான் என்றும் கிளெமென்சியூ ஒரு சமயம் சொன்னார். வாழ்க்கையில் இதற்கு சமானமாக அவர்களுக்கு வேறு உத்சாகம் கிடையாது. அவர் மேலும் சொன்னதாவது "ஜெர்மானியர்கள் பீதியை ஆராதிக்கிறார்கள். ஆனால் அந்த பீதியில் அவர்களுக்கு குதூஹலம் ஏற்படுகிறது. அவர்கள் கேவலம் போருக்காகவே யுத்தத்தை நடத்துகிறார்கள். ஏனெனில் யுத்தம் நடைபெற்றால்தான் கொலைச் சடங்குகள் சுபமாக நடத்தப்படலாம். அவர்களுக்கு மிருத்யு தேவதையுடன் ஐக்கியமும் ஒப்பந்தமும் ஏற்பட்டிருக்கிறது".

கிளெமென்சியூவின் வார்த்தைகள் இப்பொழுது நமக்கு ஞாபகம் வருகின்றன. ஏனெனில் இப்பொழுது அநேக ஜெர்மானியர்களிடையே வீழ்ச்சியின் அழகைப் பாராட்டும் தன்மை காணப்படுகிறது. மதிக்கக்கூடிய அளவும் உத்சாகமுமுள்ள பதில் புரக்ஷிகளின் வீழ்ச்சியைத் தடுக்கவும் யாதொரு முயற்சியும் காணப்படாததற்கு அவருடைய அபிப்பிராயம் ஆதரவு அளிக்கிறது. அவர்களுக்கு என்ன நேர்ந்துவிட்டதென்று அறியக்கூடாதவகையில் சம்பவங்கள் துரிதமாக நேரிட்டுவிட்டனவென்று சொல்லுவது சுலபமாக நம்பத்தக்கதில்லை. ஜெர்மனியின் எண்ணங்கள் முறிபட்டதின் முக்கியத்துவத்தை ஜெர்மனி அறியக்கூடாததற்கு வெகு காலமாக ஜெர்மனியில் காணப்பட்ட தேசிய ஜனசமூகக் கொள்கையையும், சாம்ராஜ்ய எண்ணங்களும்தான் காரணமென்பதற்கு பலமான ருஜுவும் அனுபவமும் ஆதாவளிக்கின்றன ஜெர்மானியர்களிடம் ஒருவிதமான எண்ணம் வேர் ஊன்றிவிட்டால் அது மற்ற எந்த விஷயத்தையும் கிரஹிக்க சக்தியற்றிருக்கிறது.

இத்துடன் ஜெர்மனியின் வீழ்ச்சியில் ஜனங்களை ஆழ்த்தின ஜெர்மனியின் மத துவேஷமுள்ள மனப்பான்மையையும் சேர்த்துக்கொண்டால் ஜெர்மானியரின் தற்போதைய மனோ நிலமையைப்பற்றி நல்ல தோற்றம் ஏற்படும்.

இதுதான் ஜெர்மன் வியாதியைப்பற்றிய விருத்தாந்தம். ஜெர்மானியர்களின் மனப்பான்மையை திருத்தியமைப்பதில் நான்கு ராஜீய, ஆத்மீக குணங்கள் இடையூராக இருக்கின்றன. இன்றைய ஐகிக, ராஜீய சந்தர்ப்பங்களில் விசித்திரமாகத் தோன்றினலும் ஜெர்மனியிலுள்ள நான்கு அழகான அம்சங்கள் வெகு நாட்களாக வளர்ச்சிபெற்று வருகின்றன. அவைகளை விருத்தியடையும்படி செய்தால் எதிர் காலத்தில் தேசிய ஜன சமூகக் கொள்கைதான் வளர்ச்சிபெறும். அந்த அம்சங்கள் பின்வருமாறு:—

(1) ஹிட்லரைப்பற்றிய கட்டுக்கதை. ஜெர்மனியிலும் ஜெர்மனிக்கு வெளியிலும் அநேக ஜெர்மானியர்கள் ஹிட்லர் பூமியின் தாழ்வரைகளிலுள்ள நகரத்தில் ஜெர்மன் கொடியை நாட்டிவருகிருனென்றும், அங்கு அவன் அநேக வருஷங்கள் வரையில் பத்திரமாக இருப்பானென்றும் சொல்லிவருகிருர்கள்.

(2) தேசீய ஜன சமூக கொரில்லா இயக்கம். இது ஹிம்லராலும் அவனுடைய ஆஸ்திரிய சகாவான கால்டன் ப்ரூனராலும் அமைக்கப்பட்டது. அது தோற்கடிக்கப்பட்ட ஜெர்மனியிலும் ஐரோப்பாவிலும் சுறுசுறுப்பாக வேலைசெய்ய ஆரம்பித்துவிட்டது.

(3) ஜெர்மன் ராணுவ ஜாதியாரின் முயற்சி. தவருன அபிப்பிராயம் கொண்டவர்கள் என்றும் தேசிய ஜன சமூக இயக்கத்தின் பீதிக்குட்பட்டவர்களென்றும் அவர்கள் சொல்லி வருகிருர்கள். யுத்தத்துக்குப் போகக்கூடாதென்றும், பிரான்ஸையும், பிரிட்டனையும், ருஷ்யாவையும், உலகத்தையும் தாக்கக்கூடாதென்றும், ஹிட்லரைத் தடுக்க சாத்தியமான முயற்சிகளைச் செய்த நல்லெண்ணமுள்ள ஜெர்மானியர்கள் அவர்கள்தான் என்றும் வெளிக் காட்ட முயன்றுவருகிருர்கள்.

(4) நற்குணமுள்ள ஜெர்மானியர்கள் என்று சொல்லிக்கொள்ளுகிறவர்களின் முயற்சி. தேசீய ஜன சமூக ஆக்ஷியை ஒழிப்பதற்கு அபாரமான பேருதவி செய்ததாக ருஜுச் செய்ய அவர்கள் பிரயத்னம் செய்துவருகிருர்கள்.

கடைசி அம்சத்தை சுலபமாக உபயோகப்படுத்திக்கொள்ளலாம். இது முக்கியமான அம்சம்தான். ஜெர்மனியிலும் ஜெர்மனிக்கு வெளியிலும் நாஸி ஆக்ஷிக்கு விரோதமாக நடைபெற்ற கோரமான நடவடிக்கைகள், நேசதேச துப்பறியும் சேவைப்படையினருடன் தொடர்பு, சாவதானமான, கீழறுப்பான் வேலை மூலம் ஒத்துழைப்பு போன்ற அநேக விருத்தாந்தங்கள் பரவிவருகின்றன.

இந்த பாத்தியங்களெல்லாம் ஜெர்மனியினுடையவும், ஐரோப்பாவினுடையவும், உலகத்தினுடையவும், க்ஷேமத்தை உத்தேசித்து குறிப்பான சாக்ஷியத்துடன் ருஜுச் செய்யப்படவேண்டும். ஜெர்மனியைத் திருத்தியமைப்பதில் ஸ்வதந்திர உலகம் நாஸிகளின் விரோதிகளான ஜெர்மானியர்களுடன்தான் ஒத்துழைக்கமுடியும். இந்தக் கக்ஷியில் சேர்ந்து அதை அதிகப்படுத்த உத்தேசிப்பவர்களை நாம் நம்பினல் கெடுதல் சம்பவிக்கும். ஆகையால் மிகவும் ஜாக்கிரதையாக நாம் பரிசீலனை செய்துபார்க்கவேண்டும்.

ஐரோப்பிய சமஷ்டியில் சமாதானத்துடன் ஒத்துழைக்கக்கூடிய ஜெர்மனியை அமைக்க வேண்டுமானால் ஆதிமுதல் ஹிட்லரையும் ஜெர்மன் தீங்கையும், உண்மையாகவும், உறுதியுடனும், எதிர்த்துப் போராடிய ஜெர்மானியர்களின் ஒத்தாசை அவசியமாகும். ஜெர்மனியைப் புனருத்தாரணம் செய்ய ஜெர்மனியை எதிர்த்துப் போராடியவர்களிடமிருந்து நாம் நம்பிக்கை வைக்கக்கூடியவர்களை பொறுக்கியெடுப்பதென்பது யுத்தக் கைதிகளை அழிப்பதைவிட மிகவும் முக்கியமான காரியமாகும்.

ஜெர்மன் ராணுவ ஜாதியை அடக்கினாலொழிய இந்த வேலை நடைபெறாது. ராணுவ ஜாதியாரின் தற்போதைய பிரசாரம் பழைய ஐதிக முறையை மறைத்துச் சொல்லுவதாகும். ஜெர்மன் ராணுவ ஜாதியைச் சேர்ந்த தனிப்பட்ட நபர் எவ்வளவு தாராள மனப்பான்மையுடனும் அல்லது அடக்கத்துடனும் இருந்தாலும், அவன் ஜெர்மன் யுத்த யந்திரத்தின் ஒரு அம்சம்தான். அந்த யந்திரம் இப்பொழுது அழிபட்டுப்போகவில்லை. யுத்தத்துக்கான பொறுப்பை பிறர்தலையில் சுமத்துவதென்பது அவனுடைய பிராசீனமான சுவபாவம். அது இன்றும் பிரதிபலித்துவருகிறது.

இந்த விஷயங்களை நாம் தெளிவாகவும் நிர்ணயமாகவும் தீர்த்துக்கட்டவேண்டும். ஜெர்மனி சம்பந்தமான நேசதேச நீண்டகால திட்டமும் அதேபோல் நல்ல முறையில் நிறுவப்படவேண்டும். இந்த விஷயங்களை நாம் கூடிய சீக்கிரத்தில் விளக்கிச்சொல்லாவிடில் ஜெர்மனி தவறான அபிப்பிராயங்களை வெளியிடுவதற்கான ஆதாரம் அதிகரித்துவிடும். குறிப்பான காலவரையில் ஜெர்மனிக்கு சுயஆட்சி உரிமை அளிக்கப்பட்டாலும், அளிக்கப் படாவிட்டாலும், ஜெர்மனியின் எதிர்காலக் கொள்கை முடிவு செய்யப்பட்டு தெரியப்படுத்தப் படவேண்டும்.

சென்ற சில வருஷங்களில் மேற்கு நாடுகளிலும், அமெரிக்காவிலும், குவிந்திருக்கும் ஜெர்மானியர்களிடையே அபிப்பிராயங்கள் பலமாக மாறுபாடடைந்துவிட்டன. மாஜி ஜெர்மன் சான்ஸலரான விர்த்துடையவும், மாஜி பிரஷ்ய பிரதம மந்திரியான ஆட்டோ பிரானுடையவும் தலைமையிலுள்ள ஒரு கோஷ்டி எதிர்காலத்தில் ஜெர்மன் சமஷ்டி ஏற்பட வேண்டுமென்று அபிப்பிராயப்படுகிறார்கள். மற்றவர்கள், முக்கியமாக பவேரியாவிலுள்ள தனித்திருப்பவர்கள், ஸ்வதந்திரமுள்ள நாடுகள் அதிக பலமான இணைப்பில்லாத சமஷ்டியில் சேரவேண்டுமென்றும், எங்கும் பொதுவான பழக்கவழக்கங்களும், வியாபாரமும், செலவாணிப் பொருளும் இருந்தால்போது மென்றும் சொல்லுகிறார்கள்.

ஜெர்மனியின் எதிர்கால பிரச்னை மகத்தானது, மிகவும் சிக்கலானது. அபாரமான கெடுதலையும் கோரமான சம்பவங்களையும் தவிர்க்கவேண்டுமானால் இந்த பிரச்சனைகளின் சிக்கல்களை நிவர்த்திசெய்ய வேண்டுமென்பது நிதர்சனமானது.

---

# ஜெர்மன் கடற்படையின் சரணாகதி

## பிரிடிஷ் கடற்படையின் அரியசேவை

### டைம்ஸ பத்திரிகை.

தேசத்தின் ராணுவ சரித்திரத்தில் அதிக உத்சாகமுள்ள எந்த ஆங்கிலேயருக்கும் வெள்ளைக்கொடியுடன் பிரிடிஷ் துறைமுகத்திற்கு எதிரியின் கப்பல் வருவதுபோன்ற அழகான காக்ஷியைப் போல் வெற்றிக்கு எந்த சின்னமும் ஏற்படாது. இந்த நிலமையுடன்தான் ஜெர்மனி சரணாகதி செய்தபின் நேசதேசத்தார்களின் உத்தரவின்படி தெற்குக்கரையிலுள்ள துறைமுகங்களுக்கு ஜெர்மன் நீர்மூழ்கிகள் வந்துகொண்டிருக்கின்றன.

நேசதேசக் கப்பல்கள் செல்லும் எல்லா சமுத்திரங்களிலும் யூ-படகுகளை அழிப்பது தான் இந்த யுத்தம் பூராவிலும் கடற்படையின் முக்கியமான வேலையாக இருந்தது. வெகு சீக்கிரத்தில் எதிரிக்கு இரண்டு புதிய லாபங்கள் கிடைத்தன. அவைகளை அவன் நன்கு பிரயோஜனப்படுத்தி வந்தான். ஒன்று, யூ-படகுகள் மிகவும் துரிதமாகக் கட்டப்பட்டன. மற்றொன்று நார்வேயிலும் பிரான்ஸிலும் துறைமுகங்கள் தளங்களாக உபயோகப்பட்டன.

அநேகம் தடவைகளில் கடற்படை இலாகா அட்லாண்டிக் கடல் மார்க்கத்தில் பத்திரத்தைப் பற்றி மிகுந்த கவலைகொண்டது. ஒரு சமயத்தில், ஏராளமான எண்ணெய்க் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டு வந்ததினால் பிரிட்டனை விமானப்படை தற்காப்பு செய்யமுடியாமல் போய் விடுமோமென்ற அபாயமும் ஏற்பட்டது.

இந்த அபாயம் மூன்று அம்சங்களினால் கொஞ்சம் கொஞ்சமாக நிவர்த்தி செய்யப்பட்டது. முதல் முதலாக சாமான் கப்பல்களுக்குத் துணைக்காவல் புரிய நீர்மூழ்கிகளைத் தாக்கும் கார்வெடிகள், போர்க்கப்பல்கள் முதலிய லேசான துணைக்காவல் கப்பல்கள் கட்டப்பட்டன. இரண்டாவதாக, தரையிலிருந்து புறப்படும் விமானங்களின் வட்டாரத்துக்குட்பட்ட சமுத்திரங்களில் சாமான் கப்பல்களுக்குத் துணைக்காவல் புரியவும், யூ-படகுகளைத் தாக்கவும் பிரிடிஷ் விமானப்படையின் பகுதிகள் ஏராளமாக அனுப்பப்பட்டன. மூன்றாவதாக, துணைக்காவல் விமானந்தாங்கிக்கப்பல்கள் கட்டப்பட்டு, பிரிடிஷ், அமெரிக்க கடற் கரைகளிலிருந்து துணைக்காவல் புரிய முடியாத அட்லாண்டிக் கடலின் நடுமத்தியில் செல்லும் கப்பல்களுக்கு உதவியாக அனுப்பப்பட்டன. இந்த முறைகளில் யூ-படகு அபாயம் நிவர்த்திக்கப்பட்டதுடன் நிலைமை தலைகீழாக மாறிற்று. மூழ்கடிக்கப்பட்ட சாமான் கப்பல்களுக்கு அதிகமாகவே நீர்மூழ்கிகள் மூழ்கடிக்கப்பட்டுவிட்டன. இந்த யுத்தத்தில் மொத்தத்தில் 500 நீர்மூழ்கிகள் மூழ்கடிக்கப்பட்டிருக்கின்றன.

அகில பிரிட்டனுடையவும் பிரிடிஷ் சாம்ராஜ்யத்தினுடையவும் வெற்றியானது பூராவாகக் கடற்படையையும், எல்லா ஆயுதங்களையும் உபயோகித்து கடல் மார்க்கங்களை பத்திரப்படுத்துவதையும் பொருத்தது என்ற உண்மை என்றைக்கும் இன்றைக்கும் உண்மையானது. இந்தக் கடலாதிக்கத்தை நிலை நாட்ட கப்பல்களும் விமானங்களும் முக்கியமான துறைமுகங்களை தற்காப்பு செய்யும் தரைப்படைகளும் ஒத்துழைக்கவேண்டும் விமானங்கள் தரையிலிருந்து வந்தாலும் விமானந்தாங்கிகளில் சென்றாலும் பொருட்டல்ல. கடல் மார்க்கங்களை எதிரி உபயோகிக்காமலும் பிரிடன் அதன் வியாபாரத்திற்குத் தங்குதடையன்னியிலும் உபயோகிக்கலாம். நேசதேசத்தார்கள் நீண்டகாலம் வெற்றியுடன் போரை நடத்தி கடல் மார்க்கங்களை பத்திரப்படுத்தியிருக்கிறார்கள். பிரான்ஸ் வீழ்ச்சி பெற்றதினால் மத்தியதரைக் கடலில் கடலாதிக்கம் போய்விட்டது. வடக்கு ஆபிரிக்காப் போரும் மால்டாவின் மேன்மையான தற்காப்பும் அதைத் திருப்பிப் பெற எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள். மகாசமுத்திரங்களில் ஜெர்மனியின் எவ்வித முயற்சியும் கடலாதிக்கத்தை அசைக்க முடியவில்லை. பிரிடனுக்கான போரில் பேருதவி செய்த சண்டை விமானிகளின் ஒத்தாசையின் மூலம் பிரிடனுக்கு கால்வாயில் ஆதிக்கமிருந்ததினால் எதிரி பிரிடனைப் படையெடுக்கும் நம்பிக்கையை முற்றிலும் இழந்துவிடும்படி நேரிட்டது. அட்லாண்டிக் சமுத்திர ஆதிக்கத்தினால் பிரிடன் ஜீவித்திருந்தது. ஐரோப்பில் படையெடுப்புக்கான பெரிய அமெரிக்க சேனை பிரிடனில் குவிக்கப்பட வசதி ஏற்பட்டது. ஆர்க்டிக் கடலின் ஆதிக்கத்தினால் புதிய உலகத்தின் ஐச்வர்யங்கள் ருஷ்யாவின் தீரம் பொருந்திய தற்காப்புக்குக் கிடைத்துவந்தன.

கடற்படைக்கு பீல்ட் மார்ஷல் மாண்ட்காமரி அனுப்பியுள்ள நன்றி செலுத்தும் செய்தி ஸோல்ஜர்கள் கடற்படை சகோதரர்களுக்கு செலுத்தவேண்டிய கடமையை அழகாகவும் தாராளமாகவும் ஒப்புக்கொண்டதாகும். ஆகிலும் மற்றெல்லா சேவைப்படைகளையும் போல இந்த வெற்றிக்குக் காரணமான கடற்படை பலமும் ஒன்றுபட்ட நடவடிக்கைதான். இந்த ஒற்றுமையில் மாலுமிகளும், ஸோல்ஜர்களும் விமானிகளும் இணைபிரியாது பிணைக்கப்பட்டிருக்கிறார்கள்.

---

# ஜெர்மனியில் நேசதேச மேன்பார்வை.

## பொது ஜன நீதிஸ்தல அமைப்புகள்.

(ஜார்ஜ் பைப்).

ஜெர்மன் நிர்வாகக் குழப்பத்திலிருந்து ஒழுங்குமுறையை நிலைநாட்டும் மகத்தான வேலை சிரத்தையுடன் ஆரம்பமாகிவிட்டது. இந்த முயற்சி வெற்றி சேவைக்கு அடுத்தபடியாக முக்யத்வம் வகிக்கக்கூடும்

படை யெடுப்புக்கான திட்டங்களைப்போல சமாதானத்தை நிறுவும் திட்டங்களும் விரிவாக நடைபெறுகின்றன. நேசதேச உயர்தர கமாண்டு போய்விடும். அதற்குப் பதிலாக நேசதேச மேன்பார்வை கமிஷன் அமைக்கப்படும். ஆகிலும் குறைந்த பக்ஷம் மூன்று மாதங்கள் வரையில் S. H. A. E. F. மறைந்துவிடாதென்று தோன்றுகிறது. அநேக நிபுணர்கள் அது இன்னும் அதிக காலம் நிலைபெற்றிருக்குமென்று நினைக்கிறார்கள்.

லண்டனிலுள்ளவர்கள் திட்டங்களைப் பூர்த்தி செய்ய சிரமப்பட்டு வேலைசெய்துவருகிறார்கள். அதை அமுலுக்குக் கொண்டுவந்தால் ஜெர்மனியில் மேன்பார்வை நிர்வாக நிலைமையின் அந்தஸ்தை அடைந்துவிடும். இதற்காக, எதிர்ப்பில் எஞ்சியுள்ள சின்னங்களை அழிக்கவேண்டும். அத்துடன் பொதுமக்களை கவனித்துவரவேண்டும். அல்லது கண்காணிப்பு செய்துவரவேண்டும். துருப்புகளை புதிய பிராந்தியங்களுக்குத் தக்கவாறு நடந்துகொள்ளும்படி செய்யவேண்டும். அவர்களுக்குப் போதுமான போக்குவரத்து வசதிகளைச் செய்துகொடுக்கவேண்டும்.

இந்தப் படையின் சங்கியை சுமாராக 5 லக்ஷமாக இருக்கலாம். முதல்முதலாக படைகளை அணிவகுத்து அலைகளை குறிப்பிட்ட ஆக்கிரமிப்பு வட்டாரங்களுக்கு அனுப்பவேண்டும். பெர்லின், மாக்டிபெர்க், லிப்ஸிக் அல்லது நூரம்பர்க்கில் மத்திய மேன்பார்வை ஸ்தாபனம் இருக்குமாவென்பது சந்தேகிக்கக் கூடியதாகயிருக்கிறது.

விசேஷமான நீதிஸ்தாபனம் அமைக்கப்பட்டிருக்கிறது. நியாய ஸ்தலங்களின் அமைப்பு பிரிட்டிஷ், ஐரோப்பிய திட்டங்களிலுள்ள சிலாக்யமான அம்சங்களடங்கியுள்ளது. அதாவது சாக்ஷியம் சம்பந்தமான விதிகள் கவனிக்கப்படமாட்டா. விசாரணைக்கு முன்னும் விசாரணையின்பொழுதும் நீதிபதி எதிரியை சில கேள்விகள் கேட்கலாமென்று அனுமதிக்கப்பட்டிருக்கிறதென்று பொருள்படும். நியாய இலாகா ஜெர்மனியின் பொது ஜன சட்டத்தை மொழிபெயர்த்து ஜெர்மன் சட்டத்தின் பல அம்சங்களைப்பற்றி 60 அல்லது 65 நீண்ட ரிபோர்ட்டுகளைத் தயாரித்திருக்கிறது. ராணுவ நிர்வாகத்தின்கீழ் சிறந்தவேலை மிகவும் சுலபமாக நடைபெற்றிருக்கிறது. ஜெர்மன் நியாய ஸ்தலங்கள் கூடியசீக்கிரம் விவகாரங்களுக்காக திறக்கப்படும். கைதிகள் நாஸிகளின் முறைக்கு மாறாக நடத்தப்படுகிறார்கள்.

---

## ஆல்ப்ஸ் மலைகளில் சாவு முகாம்கள்.

### பூகன்வால்டை விட கோரமானவைகள்.

ஜெர்மன் சேனையின் உயர்தர நிர்வாகியான ஜெனரல் ஜோடில் மகாநாட்டில் எழுந்திருந்து "ஜெர்மன் மக்கள் உலகத்திலுள்ள மற்றெந்த ஜனங்களையும்விட அதிகமான கஷ்டங்களை அனுபவித்திருக்கிறார்கள்" என்று சொல்லி, அவர்களை தாராள மனப்பான்மையுடன் நடத்த வேண்டுமென்று அவன் துணிவுடன் கேட்டுக்கொண்டிருந்தபொழுதே மூன்றாவது சேனையைச் சேர்ந்த குதிரைப்படைகள் பூகன்வால்டைவிட அதிக கோரமான காவல் முகாமைக் கண்டார்கள் என்று அமெரிக்க மூன்றாவது சேனையுடனிருக்கும் டெயிலி டெலிகிராப்பின் நிருபரான கார்னூலியாஸ் ரையான் செய்தி அனுப்பினார்.

இந்த முகாம் பென்ஸீ கிராமத்தில், ஆல்ப்ஸ் மலைகளில் உன்னதமான பிரதேசத்தில் குமண்டனர் ஏரியின் தெற்குக் கோடியில், ஒரு பள்ளத்தாக்கிலுள்ள மரச்சோலைகளுக்கு மத்தியில் அமைக்கப்பட்டிருந்தது. ஆஸ்திரிய நாட்டுப் புறங்களின் சோபைக்கு மத்தியில் 15,000 பீதி கொண்ட, பசியால் வாடும் மனிதர்கள் காணப்பட்டார்கள். ஒரு மாதத்திற்கு முன் அங்கு 28,000 பேர்களிருந்தார்கள். நாலைந்து வாரங்களுக்குள் 12,000 பேர்கள் பசியாலும், அல்லது தூக்கிலிடுவதினாலும், சுட்டுக்கொல்லப்பட்டதினாலும் அல்லது அடித்துக் கொல்லப்பட்டதினாலும் இறந்துவிட்டார்கள்.

அமெரிக்கர்கள் மாகாணத்திற்குள் துரிதமாக வருகிறார்கள் என்று தகவல்கள் கிடைத்தவுடன் கைதிகள் பாராக்காரர்களைத் தாக்கி அவர்களைக் கொன்றுவிட்டார்கள். அதன்பின் காலை போஜனத்திற்கு ஒரு கோப்பை காபியும், இடைவேளை போஜனத்துக்கு பச்சை உருளைக்கிழங்கும், ஒரு கோப்பைதண்ணீரும், இரவில் மூன்று உருளைக்கிழங்கும் ஒரு கோப்பை

சுடுதண்ணீரும் உட்கொண்டு வந்த கைதிகள் மெள்ளச் சென்று கர்னலின் ஆபீஸை அடைந்தார்கள். அவரைத் தூக்கிச்சென்று அவர்களை எறிக்கும் இடத்திற்கு வந்தார்கள். அங்கு ஏராளமான அடுப்புகள் இருந்தன. கதவைத் திறந்து கர்னலை அதற்குள் எறிந்தார்கள்.

இப்பொழுது அந்த முகாமுக்கு வெளியில் ஒரு பெரிய அடையாளம் போடப்பட்டிருக்கிறது. அதில் பின்வருமாறு எழுதப்பட்டிருக்கிறது:—

"நாஸிகளின் நாகரீகத்திற்கும் ஜெர்மன் அக்கிரமங்களுக்கும் இங்கு ருஜு இருக்கிறது". இந்த அடையாளத்தை அங்கு நாட்டும்படி ஜெனரல் பாட்டன் ஆக்ஞாபித்தார்.

---

# யுத்தத்தின் கடுமையான பரிக்ஷா காலத்தில் உருவாக்கப்பெற்றது.

## நேசதேச ஒற்றுமை.

### (W. N. யூயர்).

கடைசியாக நாம் ஹிட்லரின் போரின் ராணுவ திட்டத்தையும், ராஜீய எண்ணங்களையும் இப்பொழுது மதித்துச் சொல்லலாம்.

மிஸ்டர் சர்ச்சிலும், ஸ்டாலினும், ட்ரூமேனும், உத்தியோக முறையில் யுத்தம் முடிந்ததென்று ஒன்றுபட்ட அறிக்கையை வெளியிட்டது விசேஷமுள்ளது. ஏனென்றால் 1939-ம் வருஷம் ஸெப்டம்பர் மாதத்தில் ருஷ்யா, ஜெர்மனியுடன் அனுக்ரமண ஒப்பந்தம் செய்து கொண்டது. நடுநிலைமை ஒப்பந்தங்கள் என்ற முட்டுக்கட்டைக்குப்பின் அமெரிக்கா துணிக்கப்பட்டிருந்தது.

1919-ம் வருஷம் நிறுவப்பட்டு பின்பு அபிவிருத்தியடைந்த சர்வதேச உலகபத்திர திட்டம் பூராவும் நாசமாகி விட்டது. சமாதானத்தை நிலைநாட்ட அமைக்கப்பட்ட சர்வதேச சங்கம் 1936-ம் வருஷத்தில் இதாலி சம்பந்தமாக உத்தரவுகள் வாப்ஸ்பெறப்பட்டவுடன் வீழ்ச்சி பெற்றது. அதன் மூலம் அந்த சங்கம் பும்ஸத்வத்தை இழந்து விட்டதென்று வெளிப்பட்டது.

அதேபோல ஐரோப்பிய சமாதானத்திற்கு அடிச்சுவர் போலிருந்த மற்றொரு சாதகமான பிரெஞ்சு ஒப்பந்தமும் மறைந்து விட்டது. இந்த திட்டத்திற்கு அஸ்திவாரக் கல்லான பிரெஞ்சு, ருஷ்யஒப்பந்தம் உபயோகமற்றதாகப்போய்விட்டது. செக்கோஸ்லாவேகியாவை ஜெர்மனி கவர்ந்ததிலிருந்து சிறிய ஒப்பந்தமும் அழிக்கப்பட்டு விட்டது. பெல்ஜியமும் நடுநிலைமைக்குத் திரும்பி விட்டது.

பாக்கியிருந்தது பிரெஞ்சு போலிஷ் ஒப்பந்தம்தான். அதற்கு உபபலமாக பிரிடன் புதிய வாக்குறுதிகளைச் செய்தது. இதுவும் ஹிட்லரைத் தடுக்கக்கூடியதில்லை. எல்லா முறைகளிலும் அக்கிரமப்போரை நடத்த ஹிட்லர் உலகத்தை அநேக பாகங்களாகப் பிரித்து விட்டான்.

ருஷ்யாவைத் தாக்கத்தயாராக இருக்கும் வரையில் ருஷ்யா சும்மாயிருக்கும் படியாகவும் அவன் ஏற்பாடு செய்து விட்டான். அமெரிக்கா ஐரோப்பிய விவகாரங்களில் கவனக்குறைவுடன் இருந்தது. ஐரோப்பிய சிறிய தேசங்களை அவன் பயமுறுத்தி அடிபணியும்படி செய்து விடலாம்.

அவனுடைய உத்தேசங்கள் அநேகமாக சரியாக முடியும்போல தோன்றின. கிழக்கிலும் மேற்கிலும் இரண்டு பலமான தாக்குதல்களைச் செய்தால் போலந்தையும், பிரான்ஸையும் வீழ்த்திவிடலாம். துணிக்கப்பட்டு, தாக்குதலுக்குட்பட்ட பிரிடன் சமாதானம் செய்து கொள்ளும் அல்லது அவ்விதம் செய்யும்படி ஜெர்மன் விமானப்படை அதைக் கட்டாயப்படுத்திவிடும்.

ஐரோப்பா பூராவும் சில மாதங்களுக்குள் ஜெர்மனியின் ஆதிக்கத்துக்குள் வந்துவிடும். ஜெர்மனியின் மேன்பார்வையுள்ள, ஜெர்மன் அமைப்புள்ள, ஜெர்மன் நாயகமுள்ள, ஐரோப்பா போல்ஷிவிக் ருஷ்யாவை வெகுசீக்கிரத்தில் முறியடித்துவிடும்.

ஆனால் இந்த எண்ணங்களை இரண்டு தவறுதல் கவிழ்த்து விட்டன. ஹிட்லர் எண்ணியதுபோல் பிரிடனும் பிரிடிஷ் சாம்ராஜ்யமும் வீழ்ச்சி பெறவில்லை. ஹிட்லரின் தாக்குதலின் அதிர்ச்சியும் அவனுடைய எண்ணங்களின் தோற்றமும் அவன் எதிர் பாராதபடி உலகத்தில் ஒரு புதிய ஒற்றுமையை உண்டு பண்ணின.

1940-ம் வருஷத்தில் பிரிடன் சமாளித்து நின்றதிலிருந்து அநேக பயன்கள் கிடைத்தன. உலகத்தின் மற்ற பாகங்களுக்கு அவகாசம் கிடைத்தது. ஜெர்மனியின் ஆரம்ப வெற்றியினால் ஏற்பட்ட மதிமயக்கம் ஜனங்களை விட்டகன்றது. எதிர்ப்பு இயக்கங்களை ஆரம்பிக்க அது சந்தர்ப்பம் அளித்தது. அச்சு நாடுகள் மத்திய கிழக்கில் படையெடுப்பார்களென்றும், அவ்விதம் செய்தால் ருஷ்யா துணிக்கப்படுமென்றும் சூசகம் ஏற்பட்டது. அமெரிக்காவின் கவனத்தை அது தூண்டி விட்டது. அபாயம் எவ்விதம் என்பதையும் அது வெளிப்படுத்தியது. பின் புறத்தை சுத்திசெய்து கொள்ளாமல் ருஷ்யாவைத் தாக்கும்படியாக அது ஹிட்லரைக் கட்டாயப்படுத்தி விட்டது.

பிரிடனின் சமாளிப்பு என்ற கடினமான வைரத்தைச் சுற்றித்தான் உலக ஸ்வதந்திர அமைப்பு தோன்றிற்று. யுத்தத்தின் முதல் கட்டத்தில் பழைய சர்வதேச சங்கம் இறுதியாக அழிக்கப்பட்டது. இரண்டாவது கட்டத்தில் அதற்கு பதிலாக நேசதேசத்தார்களின் மகத்தான ஒற்றுமை ஏற்பட்டது. அதற்கு அணைகோலியாக பிரிடனும் அமெரிக்காவும் அட்லாண்டிக் சாஸனத்தை பிரகடனம் செய்தன. ருஷ்யாவுக்கும் பிரிடனுக்கும் பரஸ்பர உதவி ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.

வெற்றி கிடைத்த தருணத்தில் சர்வதேச பிரதிநிதிகள் சான்பிரான்ஸிஸ்கோவில் புதிய உலக ஸ்தாபனத்திற்கு உருவமும், அமைப்பும் சட்ட பூர்வமான தோற்றமும் ஏற்படுத்துவதற்காகக்கூடியிருந்தார்கள். சமாதானத்தை நிறுவ அமைக்கப்பட்ட பழைய சங்கத்தைப் போல புதிய ஸ்தாபனம் அமைக்கப்படவில்லை. இது யுத்த காலத்தில் அமைக்கப்பட்டது. 1945-ம் வருஷத்தில் நேசதேசச்கூட்டுறவு சிற்சில விஷயங்களில் அபிப்பிராய பேதமிருந்தபோதிலும் 1919-ம் வருஷத்தில் ஏற்பட்ட சர்வதேசக்கூட்டுறவைவிட கெட்டியானது.

ஆகிலும் சமாதான காலத்தில்தான் அதன் பரிக்ஷாகாலம் வந்துவிட்டது. ஹிட்லருடையவும் அவனுடைய சகாக்களுடையவும் வெறிபிடித்த அக்கிரமப் போர்கள் உலகம் பூராவையும் எதிர்க்கக்ஷியில் ஒன்றுபடுத்தி விட்டன. வெற்றிக்காக மற்ற எல்லா அக்கரைகளையும் பொருட்படுத்தக்கூடாதென்ற அவசியம் மறைந்து வருவதினால் வித்தியாசங்கள் அபிவிருத்தியடைவதற்கு சந்தர்ப்பம் ஏற்படும்.

நல்ல காரியத்தை உத்தேசித்து இந்த வித்தியாசங்கள் தோன்றவேண்டியதுதான். பெரிய மூன்று வல்லரசுகளும் ஒன்றுபட்ட எண்ணங்களைப்பெற்று, மற்ற தேசங்கள் அவைகளை நிராக்ஷேபணையாக ஒப்புக்கொள்ளுவதென்பது உலகத்திற்கு க்ஷேமமானதல்ல.

வித்தியாசங்களைத் தலைகிளப்பவிடாமல் தடுப்பது சர்வதேச ஸ்தாபனத்தின் லக்ஷியமல்ல. விவாதம், சமாதானம் என்ற நாகரீக முறைகளில் அவற்றிற்கு பரிகாரம் தேடுவதுதான் அதன் லக்ஷியம்.

---

## ஆசியாவில் ஜப்பானின் புதிய உலக திட்டம்.

### ஸமக்ஷேம திட்டத்தின் இகழ்ச்சி.

(டைம்ஸ் பத்திரிகை).

ஐரோப்பிய வெற்றிக் கொண்டாட்டத்தில் பிரிடனிலும் அமெரிக்காவிலும் காணப்பட்ட மிதமான நடவடிக்கைகளிலிருந்து தலைவர்களுடன் ஜனங்களும், சர்வதேச உலக பத்திரம் ஏற்படுமுன் இன்னும் அதிகமான முயற்சி செய்யவேண்டும, தியாகம் செய்யவேண்டுமென்று அறிந்துவிட்டார்களென்று தெரியவருகிறது.

ஜெர்மனியை முறியடித்துவிட்டதினால் சேசதேசத்தாரின் பூரா ஐச்வரியங்களையும் ஒரு போர்முனையில் ஈடுபடுத்தலாம். அதன் மூலம் ஆசியாவிலுள்ள படைகளுக்கு ஆதிக்கம் கிடைத்துவிடும். வெற்றியும் நிச்சயமென்று ஏற்படும். ஆனால் அது ஜப்பானை பலஹீனப் படுத்தமுடியாது. மேலும் ஜப்பானைத் துணிக்க நாம் செய்துவரும் முயற்சியும் ஜப்பானியத் தலைவர்களின் லக்ஷியத்தை மாற்றிவிட்டது. நாஸி ஜெர்மனியின் எழுச்சியும் வெற்றியும் ஜப்பானிய தேசீய முன்னேற்றத்திற்கு சந்தர்ப்பம் அளிக்கக்கூடியதென்று அவர்கள் எண்ணினார்கள். ஜப்பான் சந்தர்ப்பத்தை உபயோகித்தது. அவனுடைய மாஜி நண்பனின் துர்கதி ஜப்பானை ஒன்றும் பாதிக்காது. ஆனால் சந்தர்ப்பம் மாயா ஸ்வரூபமானதென்று ருஜுவாகிவிட்டால் ஜப்பான் தந்திரங்களை மாற்றியமைக்கவேண்டும் என்பதற்கு ஆதாரவு ஏற்படும்.

இவ்விதமான ஒத்திகைகளில் ஜப்பானுக்கு நீண்டகாலப் பயிற்சி உண்டு. ஜப்பானிய நிர்வாகத்தை நடத்தும் மூன்று அம்சங்களான, சக்ரவர்த்தியின் பரிவாரங்களும், போர்ப் படைகளும், கக்ஷித் தலைவர்களை அடக்கியாளும் முதலாளிகளும் ஜப்பானிய அக்கரைக்குத் தக்கவாறு மிதமாகவோ அல்லது போர்புரியும் தன்மையாகவோ தோன்றும்படியாக அவர்களுடைய நாயகத்தை மாற்றிக்கொள்ள பழக்கப்பட்டவர்கள். அநேக முறைகளில் தேசம் தோன்றும்படியாக அவர்கள் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ஒரு சமயம் அது அழகிய தோற்றங்களும் ருசிகரமான நடவடிக்கைகளும் உள்ளதென்று சொல்லப்படும். மற்றொரு சமயத்தில் கிழக்கு நாடுகளில் ஜப்பான் சிறந்த நாடென்றும், காலந்தவறாத, காரியக்குறியுள்ள துணிவுள்ள நாடென்றும், போல்ஷிவிஸத்தினால் பயமுறுத்தப்பட்ட குழப்பமான நிலைமையுள்ள கிழ்த்திசையில் சட்டத்தையும் ஒழுங்குமுறையையும் கடைப்பிடிக்கும் நாடென்றும், வியாபாரத்திற்காக கிழக்கிலுள்ள பிற்போக்கான தேசங்களை ஒழுங்குள்ள ஒரு சமஷ்டியாகச் சேர்க்கவேண்டுமென்ற திட்டப்படி உலகத்தின் சமாதானத்தை நிறுவும் நாடென்றும் சொல்லப்பட்டு வந்திருக்கிறது.

ஜப்பானிய ராஜதந்திரிகளுக்கு சமாதானம் என்பது நன்றாய் பரிசீலனை செய்யப்பட்ட ஆயுதம். ஜெர்மனியின் ராஜீய யந்திரத்தில் அது முக்கியமான அம்சம். ஆகிலும் ஜப்பானியக் கொள்கையில் காணப்படும் பேத்துமாத்துகளுக்கும் தந்திரங்களுக்கும் கீழ் உலக ஆதிக்கம் பெறவேண்டுமென்ற மாறுபடாத லக்ஷியம் காணப்படுகிறது. இதற்கு அத்தாக்ஷியாக சந்தேகப்படக்கூடிய டனகா சாஸனத்தையும் அல்லது மிஸ்ட்டர் மஞ்சுஒகோ அல்லது கடற் தளபதி டாகாஹாஷி போன்ற தனிப்பட்ட ராஜதந்திரிகளின் சொற்பொழிவுகளையும் இங்கு எடுத்துச்சொல்ல வேண்டியதில்லை. 1940-ம் வருஷத்தில் இரண்டாவது கோனுயிநிர்வாகம் மிதமாகவும் அதிகார தோரணையுடனும் பின்கண்ட தேசீக காரிய நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தது. முதலாவதாக, மஞ்சூரியாவிலும், சைனுவிலும் மேன்பார்வையை அடிப்படையாகக் கொண்டு ஆசியாவில் ஒரு புதிய உலக அமைப்பை ஏற்பாடு செய்வது. இரண்டாவதாக, ஜப்பானின் புனிதமான சக்ரவர்த்தியின் வம்சத்துக்கு எல்லா அயல்நாடுகளையும் அடிபணியச் செய்வது என்ற ஹாக்கோ இச்சியூவின் உயர்வான கொள்கையின்படி உலக சமாதானத்தை நிறுவுவது. மூன்றாவதாக, இந்த இரண்டு லக்ஷியங்களையும் பெற தேசீய வாழ்க்கையை முற்றிலும் மாற்றியமைப்பது. நான்காவதாக, தேசீயக்கொள்கையை நிறைவேற்ற அவசியமான முஸ்திப்புகளை வழங்குவது.

இந்த எண்ணங்கள் தப்பிதமாகத் தோன்றினாலும் அமெரிக்கருக்கு அரசியல்போலும் பிரிடிஷ் வாக்காளர்களுக்கு பார்லிமெண்டுபோலும், ஜப்பானியர்களுக்கு இந்த எண்ணங்கள் நியாயமானவை, அறிமுகமானவை. ஜப்பானிய சக்ரவர்த்தி புனிதமான தெய்வப் பிறப்பென்றும் உலகம் பூராவையும் ஜப்பான்தான் ஆளவேண்டுமென்ற எண்ணமானது நாஸி ஜெர்மனியிலுள்ள உயர்வான ஜாதிக் கொள்கையைவிட பலமாக ஜப்பானில் ஒப்புக்கொள்ளப் பட்டு வேரூன்றியிருக்கிறது. இந்தக் கொள்கையை நிர்மூலமாக்கி அதற்குப் பதிலாக மற்ற நேசதேச நாடுகளுடன் சமாதானமும் கண்யமுமுள்ள கூட்டாளியாக இருக்கும் முறையை ஜப்பானில் ஸ்தாபிப்பதென்பது ஜெர்மனியைவிட மிகவும் கஷ்டமானது.

நவீன தொழிற்சாலைகளுள்ள நாகரீகத்தின் கீழும் ஜப்பான் இன்னும் மத்தியகால நாகரீகத்தில்தான் இருந்துவருகிறது.

75 வருஷங்களாக இப்போது நடைபெறும் போருக்கு ஜப்பான் தயாரிக்கப்பட்டது. மன்னர்களின் கொள்கைகளும் ஜப்பானின் தேசீய ஐதீகத்துக்கு ஒத்ததாக இருந்ததால், நாஸி ஜெர்மனியைப்போல, பொதுமக்களின் ஒரு பகுதியைக்கூடக் கட்டாயப்படுத்த

வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. சில பொதுவுடமைக் கக்ஷிக்காரர்களைத் தவிர மற்ற எல்லா ஜப்பானியர்களும் யுத்தம் நியாயமானதென்றும், நேசதேசங்களுக்கு நெருக்கடியான சமயத்திலிருந்த மன உறுதியைப்போல, ஜப்பானுக்கு வெற்றி நிச்சயமென்றும் நம்பியிருக்கிறார்கள்.

யுத்தத்தில் ஜப்பானியர்கள் மனித வர்க்கத்தினிடம் கொஞ்சம்கூட இரக்கம் காண்பிப்பதில்லை. இதற்குக் காரணம் அவர்களிடம் வெறிபிடித்தவர்களிடம் காணப்படும் குதூகலமும், தேசிய கலைஞானத்தின் மிகவும் புனிதமான, பழமையான ஐதீகங்களும் நிரம்பியிருக்கின்றன. வெற்றி அல்லது மரணம் என்பதுதான் ஜப்பானின் மதம்.

ஆகிலும் ஜப்பான் வெகுகாலமாகப் பொருமையுடன் தயாரித்திருக்கும் கவசத்தில் ஓட்டைகள் இருக்கின்றன. முடியடித்த நாடுகளின் ஒத்துழைப்பை ஜப்பான் சம்பாதிக்கவில்லை. ஜப்பானுக்குள்ள மமதையினால் அது பிறரை இரக்கத்துடன் நடத்தவோ அல்லது பிறரின் மனப்பான்மையை அறியவோ அது சக்திபெற்றிருக்கவில்லை. ஆகையால் அநேக நாடுகளில் நேசதேசத்தாருக்கு சக்திவாய்ந்த நண்பர்கள் இருக்கிறார்கள்.

உண்மையாக, "ஆசியா ஆசியா வாசிகளுக்கே" என்ற ஜப்பானின் மேற்கோள் அதற்கே ஆபத்தாகத் திருமபிவிட்டது. ஜப்பான் அமைத்த பர்மிய தேசீய சேனையை சரணாகதி செய்து சந்தர்ப்பத்தை உபயோகப்படுத்திக்கொண்டதென்பது ஜப்பான் நாடெங்கும் உண்டு பண்ணியிருக்கும் விரோத மனப்பானமையை வெளிப்படுத்துகிறது.

---

## 2,000 சூபர் பறக்கும் கோட்டை விமானங்கள் ஜப்பானிய நகரங்கள் பேரில் வெடிகுண்டுகளைப் போடுகின்றன.

### டுலிட்டில் ஒரு நடவடிக்கையில் 2,0000 டன்கள் வெடிகுண்டுகளைப் போட திட்டம் வகுக்கிறார்.

ஜப்பானிய நகரங்கள் பேரில் ஒரே மூச்சில் 2,000 சூபர் பறக்கும் கோட்டைகளைக் கொண்டு 20,000 டன்கள் மொத்த எடையுள்ள வெடிகுண்டுகளைப் போடவேண்டுமென்ற ஜெனரல் டுலிட்டிலின் திட்டம் பூர்த்தியாகும் நிலைமையிலிருக்கிறதென்று (டெயிலி டெலிகிராப்பின் விமான நிருபர்) எழுதுகிறார்.

ஜப்பானுக்கருகில் அமெரிக்கா தளங்களைப் பெற்றவுடன் விமானங்கள் பெட்ரோலுக்கு பதிலாக அதிகமான வெடிகுண்டுகளை ஏற்றிச் செல்லக்கூடும்.

நாஸி ஜெர்மனியைப் போல ஜப்பானின் யுத்த யந்திரத்தையும் குறைக்க நடவடிக்கை ஆரம்பமாகிவிட்டது. சமீபகாலத்தில் நாகோயாவை 500 சூபர் பறக்கும் கோட்டைகளும் 5,000 அமெரிக்க விமானிகளும் தாக்கினவென்பது நேசதேச விமான நடவடிக்கை அதிகரித்தது எனபதற்கு அடையாளம். இந்த கனமான வெடி விமானங்கள் மரியானஸ் தீவிலிருந்து புறப்பட்டன. இந்த நடவடிக்கையில விமானங்கள் மொத்தமாக 3,000 மைல்கள் பறந்து சென்றன.

இந்தத் தீவுகளில் இவ்வளவு விமானப்படைப் பகுதிகள் இருந்து வருகின்றனவென்பது பசிபிக்கில் பெரிய உபயோகமுள்ள விமான தளங்களை அமைக்க அமெரிக்கா முயன்று வருகிறதென்பதை வெளிப்படுத்துகிறது. வெடிகுண்டுகளும், பெட்ரோலும் மூலதீப்புகளும், உணவுப் பொருளகளும் ஏராளமான அளவில் ஆயிரக்கணக்கான கடல் மார்க்கங்கள் தாண்டிச் செல்ல வேண்டியிருந்தன.

ஜப்பானின் மூன்ருவது நகரமான நாகோயாவில் கனமான, சில்லரை பாகங்களைச் செய்யும் தொழிற்சாலைகளும், புதிய விமான ரகங்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளும் இருக்கின்றன.

நூதனமாகக் கட்டப்பட்ட லங்காஸ்டர் விமானங்கள் 12,000 ராத்தல்கள் உள்ள பூகம்ப வெடிகளைப் போட பஸிபிக்குக்கு அனுப்பப்படலாமென்றும் சொல்லப்படுகிறது. ஜப்பானுக்கு சமீபத்தில் விமானதளங்கள் கிடைத்தால் 22,000 ராத்தலுள்ள வெடிகுண்டுகளும் வீசப்படலாம்.

---

# ஜப்பான் அமைத்த பர்மிய சேனை நேசநாடுகளுடன் ஒத்துழைக்கிறது.

## பின்வாங்கும் எதிரிக்குத் தொந்தரவு.

(டைம்ஸ் பத்திரிகை).

மகத்தான பருவகால மழை ஆரம்பிப்பதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்னதாகவே பெரிய துறைமுகமான ரங்கூனைப் பிடித்ததென்பது தெய்வாதீனமாக தகுந்த காலத்தில் ஏற்பட்டது. தெற்கு பர்மாவில் முற்போக்கான அற்பமான பருவகால மழை துருப்புகளின் சலனத்துக்கு இன்னல்களை விளைவித்தது. இந்த துணிவுகரமான ராணுவ நடவடிக்கை பயன்படாமல் போனாலும் அல்லது பின்வாங்கும் ஜப்பானியர்கள் துறைமுகத்தை அழித்துச் சென்றாலும் பர்மாவிலுள்ள சக்திவாய்ந்த நேசதேசப்படைகளுக்கு ஆகாய மூலமாகவும் ரஸ்தா மூலமாகவும் சப்ளைகளை அனுப்ப ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

உட்புறத்திலுள்ள துறைமுகத்துக்கு நேசதேச விமான நடவடிக்கையாலும் ஜப்பானியரின் நாசவேலையாலும் ஏற்பட்ட பழுதை சுலபமாக சரிப்படுத்திவிடலாம். ரங்கூனிலுள்ள நதி மார்க்கமாக பெரிய கப்பல்கள் துறைமுகத்துக்குள் நுழைந்துவிட்டன. அவைகள் வந்தபின் பர்மாவிலுள்ள 14-வது சேனைக்கும் மற்ற நேசதேசப்படைகளுக்கும் ஒருவாறு ஆறுதல் ஏற்படும். இதற்குமுன் வேனிற்கால மழையின்பொழுது அவைகள் கல்கத்தாவிலிருந்து இராவதி வரையில் 1,600 மைல்கள் தூரம் இருப்புப்பாதை, நதி, ரஸ்தா முதலிய போக்குவரத்துகளை நம்பி இருக்கவேண்டியிருந்தது. இதனால் நேசதேசப் போக்குவரத்து விமானப்படை மேகக் கூட்டங்களையும் மின்சார தொந்தரவுகளையும் காற்று அலைகளையும் சமாளிக்கவேண்டிய சங்கடம் மறைந்தது. இந்த சங்கடங்கள்தான் பருவகாலம் இருந்த $3\frac{1}{2}$ மாதங்களில் பர்மா ஆகாயத்தில் வெகுதூரம் பறந்து செல்லுவது கவலைக்கிடமான அபாயம் பொருந்திய நடவடிக்கையாக இருந்தது.

இந்த யுத்தத்தில் எந்த நடவடிக்கையிலும் விமான சக்தி இவ்வளவு அற்புதமாகவும் பலமாகவும் உபயோகிக்கப்படவில்லை. போக்குவரத்து விமானப்படை மாலுமிகள் ஒருபொழுதும் பின்தாங்கி நிற்கவில்லை. ரங்கூன் வீழ்ச்சி பெறுவதற்குமுன் 60 நாட்களில் அவர்கள் பர்மாவிலுள்ள 14-வது சேனைக்கும் மற்ற நண்பர்களுக்கும் தினசரி 2,000 டன்களுக்கு குறையாத சர்பராக்களையும், தளவாடங்களையும் ஏற்றிச் சென்றிருக்கிறார்கள்.

ரங்கூன் வீழ்ச்சி பெற்றதிலிருந்து பர்மாவில் ஜப்பானுக்கு இருந்த ஆசை அழிக்கப்பட்டதென்றாலும் அங்கு போர் முடிந்துவிட்டதென்று எண்ணக்கூடாது. ஆனால் பாக்கியிருப்பது சேனைகளைத் துடைக்கும் வேலைதான். ஜப்பானியர்கள் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுவிட்டார்கள். 20,000 சங்கியையுள்ள ஒரு பகுதி தெற்கு பர்மாவில் ரங்கூனுக்கும் புரோமுக்கும் மத்தியில் தெற்கு பர்மாவின் மேற்கில் துணிக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பிரதேசம் நமது வசமாகிவிட்டது. இந்தப் பகுதியின் ஒரு பாகம் இராவதியின் மேற்குக் கரையில் அடைபட்டிருக்கிறது. மற்றொரு பகுதி சிரம சாத்யமான மலைகள் வழியாக சிட்டாங் பள்ளத்தாக்குக்குச் சென்று விசாலமான நதியைத் தாண்டி மோல்மீனுக்குச் செல்லுவதற்கு பிரயத்னம் செய்துவருகிறது. மாண்டலேயிலிருந்து டாங்கூ வரையில் நடைபெற்ற போர்களில் நாசம் செய்யப்பட்ட படைகளின் எஞ்சியவைகள் கொண்ட மற்றொரு பகுதி சிறு கோஷ்டிகளாகக் கலைந்துவிட்டது. சில கோஷ்டிகள் ஷான் நாடுகள் வழியாக ஓடி சியாமிலுள்ள சியங்மே இருப்புப்பாதையை நோக்கிச் செல்லுகின்றன. மற்றவைகள் பாங்காக்குச் செல்லும் இருப்புப் பாதையின் தலைப்பான மோல்மீனுக்குச் செல்லுகின்றன. இந்த ஓடுகாலிகள் அகப்பட்டுக்கொண்டால் கோரமாக போர் புரிய சக்தி பெற்றவர்கள். ஆகிலும் அகப்பட்டுக்கொள்ளாமல் தப்பி ஓட வேண்டும் என்றுதான் அவர்கள் கவலை கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அநேக நதிகளைத் தாண்டவேண்டும். விரோதிகளின் நாடு வழியாகச் செல்லவேண்டும்.

சம க்ஷேம திட்டத்தில் சந்தோஷத்துடன் பர்மியர்கள் சேர்ந்துகொள்வார்கள் என்ற தவறான நம்பிக்கையின் பேரில் ஜப்பானியர்கள் திரட்டிய பர்மிய தேசிய சேனை உதவியற்றதாக ஆகி ஜப்பானையே தாக்க உட்பட்டுவிட்டது. மார்ச்சு மீ கடைசி முதல் அதன் தலைவரான அவுங் ஸென் பிரிடிஷ் துப்பறியும் சேவைப் படையுடன் தொடர்பு ஏற்படுத்தினான். கலகங்களையும் ஏற்பாடு செய்தான். நமது படைகள் முன்னேறும் சமயத்தில் கலகக்காரர்கள் நடவடிக்கையை ஆரம்பித்தார்கள். நாமும் அவர்களுக்கு ஒத்தாசை செய்தோம். பர்மிய தேசாபிமானிகள் பின்வாங்கும் ஜப்பானியர்களைத் துன்புறுத்தினார்கள். ஒரு நடவடிக்கையில் எதிரியின் 54-வது டிவிஷனின் கமாண்டரை மறைமுகமாக இருந்து கொன்றார்கள். ரங்கூனுக்கு நாம் முன்னேறுவதைத் தடுக்க எதிரி ஏற்பாடு செய்திருந்த திட்டங்களையும் சீர்கேடடையும்படி செய்துவிட்டார்கள். அவர்கள் செய்த வேலையானது ஒரு சில ராஜீய அமிதவாதிகளும் கொள்ளைக் கூட்டத்தாரும் செய்த கெட்ட நடவடிக்கைகளைக்கொண்டு பர்மா விரோத மனப்பான்மையுள்ளது என்ற கட்டுக்கதையைப் பொய்யாக்கிவிட்டது.

---

## சிங்கப்பூரிலிருந்து ஜப்பான் வரையில் சுரங்க வெடிகள்.

### எதிரியின் கடல்மார்க்கம் முற்றுகை செய்யப்பட்டது.

(குவாமிலுள்ள டெயிலி மெயில் நிருபரான ஜார்ஜ் டெபட்).

இந்தியாவிலும், மரியனாஸ் தீவுகளிலும் இருக்கும் சூபர் பறக்கும் கோட்டை விமானங்கள் ஒவ்வொன்றும் 10 டன்கள் மொத்த எடையுள்ள சுரங்க வெடிகளை ஏற்றிக்கொண்டு சிங்கப்பூரிலிருந்து ஜப்பான் வாசற்படி வரைக்கும் உள்ள சமுத்திரங்களில் சுரங்கவெடிகளைப் பாவியிருக்கிறார்கள். சரித்திரத்திலேயே இதுதான் மிகப் பெரிய சுரங்கவெடி பாவும் நடவடிக்கையென்று அமெரிக்கர்கள் இதை வர்ணிக்கிறார்கள்.

சுரங்கவெடி பாவப்பட்ட இடம் 3,500 மைல்களுக்கு மேற்பட்டது இந்த நடவடிக்கை மார்ச்சு மாதக் கடைசில் ஆரம்பிக்கப்பட்டது. மரியனாஸ் தீவிலிருந்த 21-வது பாம்பர் கமாண்டு விமானங்களால் ஆகினாவாவில் படைகள் இறங்குவதற்கு ஒத்தாசையாக மேற்கு ஜப்பானைச் சுற்றியுள்ள கடல்களில் வெடிகுண்டுகள் போடப்பட்டன.

டோக்கியோவுக்குத் தென்கிழக்கில் 1,500 மைல்களிலுள்ள டினியன் தீவிலிருந்து புறப்பட்டு பிரிகெடியர் ஜெனரல் ஜான் H. டெவிஸின் தலைமையின் கீழ் அவைகள் நடவடிக்கையைத் துவக்கின. ஜப்பானின் கடல் மார்க்கங்களை முற்றுகை செய்வதற்காக ஜப்பானின் முக்கிய தீவுகளுக்கிடையிலுள்ள உள்நாட்டு சமுத்திரங்களிலும் அதற்குப் போகும் வழிகளிலும் சுரங்கவெடிகள் பாவப்பட்டன. ஜப்பானுக்கு வரும் போக்குவரத்துகளின் நான்கில் மூன்று பாகம் கடல் தாண்டி வரவேண்டும். விமானங்கள் சுரங்கவெடிகளைப் பரவுவதற்காக வடக்கு பஸிபிக்கு வழியாகவும் மொத்தத்தில் 3,200 மைல்களும் பறந்து செல்லவேண்டியிருந்தன.

சுரங்கவெடிகளைப் பாவும் நடவடிக்கை 19 தடவை நடைபெற்றது. ஜப்பானுடையவும் ஜப்பான் ஆக்கிரமித்திருப்பதுமான துறைமுகங்களிலும், கால்வாய்களிலும், வழிகளிலும் சுரங்கவெடிகள் பாவப்பட்டன. இந்தியாவிலிருந்தும் இரண்டு தடவை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. அவற்றின் லக்ஷியம் சிங்கப்பூர்.

இரவில் நடைபெறும் இந்த நடவடிக்கை பகலில் நடைபெறும் நடவடிக்கைகளுக்கு உதவியாக இருக்கும். பகல் நடவடிக்கைகளும் அதிகரித்து வருகின்றன. அவைகள் ஜப்பானிய உற்பத்தியையும் எண்ணெய் ஸப்ளையையும் அழித்துவிடும்.

---

## ரங்கூனில் குழந்தைகள் சிரிப்பை மறந்துவிட்டன.

### ஜப்பானிய ஆட்சியின் லாபம்.

(ரங்கூனிலுள்ள டெயிலி மெயில் நிருபர்).

ரங்கூன் விடுதலைபெற்ற தகவல் நாட்டுப்புறங்களில் பரவும்பொழுது ஆயிரக்கணக்கான அகதிகள் அங்கு திரும்பி வருகிறார்கள். இது இப்பொழுதுள்ள நிலைமையில் சங்கடத்தை

விளைவிக்கிறது. தற்பொழுது ரங்கூனிலுள்ளவர்களுக்கே போதுமான அளவு உணவுப் பொருள் இல்லாமையால் அதிகாரிகள் அகதிகள் நுழைவதை கட்டுப்பாடுசெய்து வருகிறார்கள்.

ஜப்பானிய ஆக்கிரமிப்பு பூராவிலும் அங்கு இருந்த ஜனங்கள் பசியால் வாடுகிறார்கள். குழந்தைகள் இளைத்துப்போய் ஆகாரமில்லாமல் அநேக மாதங்களாகக் கஷ்டப்பட்டதாகக் காணப்படுகிறார்கள். அவர்களைப் பார்க்கும்பொழுது மற்றொரு துக்கமான சம்பவம் வெளியாகுகிறது. ரங்கூனில் இப்பொழுது குழந்தைகள் சிரிப்பதில்லை, விளையாடுவதில்லை.

அநேக குழந்தைகள் சிரிக்கும் முறையையே மறந்துவிட்டன. அவைகள் உட்கார்ந்து கொண்டு திகைப்புற்று வாடிய முகத்துடன் உற்றுப்பார்க்கிறார்கள். ஜப்பானின் பீதி என்ற மற்றொரு தூர் வியாபாரம் காணப்படுகிறது. சிண்ட்வின் நதியிலிருந்து எங்கு பார்த்தாலும் இதே கோலம்தான். ஜப்பானியர்கள் காடுகளில் விட்டுப்போன குடிசைகள், பன்றிகள் வசிக்கும் கொட்டில்கள் போன்று இருக்கின்றனவே ஒழிய மனிதர்கள் வசிக்க லாயக்குள்ளதாக இல்லை. அங்கும், யுத்தத்தினால் பாழடைந்த ஷ்வீபோவிலும், அக்கிரமப் புணர்ச்சியும் துக்கமும் நிறம்பிய மாண்டலேயிலும் இதே காட்சிதான்.

ரங்கூனில் ஜப்பானின் காட்டு மிராண்டித்தனத்தின் அடையாளம் அதிக கோரமாக இருக்கிறது. அகலமான மர வரிசைகளுள்ள உல்லாச சாலைகளில் நரகக் குவியல்கள் அநேக அடி உயரம் குவிக்கப்பட்டிருக்கின்றன. ஜலதாரைகளிலும் அவைகள் ஏராளமாகக் குவிக்கப்பட்டிருக்கின்றன. நகரம் பூராவும் ஒரே துர்க்சந்தம் வீசுகிறது. அநேக மாதங்களாக தண்ணீர் ஓடவில்லை. சுகாதாரமும் கவனிக்கப்படவில்லை.

நகரம் அழிவதைக் கண்டு சகிக்காத ஆயிரக்கணக்கான ஜனங்கள் நாட்டுப்புறங்களுக்கு ஓடிவிட்டார்கள். இந்த ஆபாசத்தை லக்ஷியம் பண்ணாமல் ஜப்பானியர்கள் பதக்கங்களுள்ள உடுப்புகளைப் போட்டுக்கொண்டு மமதையுடன் திரிந்து வந்தார்கள்.

நீங்கள் எதிர் பார்ப்பதற்குக் குறைவாகத்தான் வெடிகுண்டு வீச்சின் நாசம் காணப்படுகிறது. ஆனால் கப்பல் பழுதுபார்க்கும் நிலையங்களில் உள்ள எஃகுகள் கோணல் மாணலாக முறுக்கப்பட்டுக் கிடக்கின்றன. ஆகிலும் சீர்திருத்தம் ஆரம்பமாகிவிட்டது.

இப்பொழுதுதான் முதன் முதலில் நவீன நகரத்தில் ஜப்பானியரின் கலைஞான சின்னத்தைப் பார்க்கிறோம். தூரக்கிழக்குப் போரை நடத்த நமது முயற்சி தளர்ச்சி பெறக்கூடாதென்பதற்கு எச்சரிக்கை வேண்டுமானால் இந்த நகரத்தின் தோற்றம் ஒன்றே போதுமான அத்தாக்ஷியாகும்.

---

# ஐந்து வருஷ விவசாயம்.

## உற்பத்தி அளவு அதிகம்.

**L. F. ஈஸடர் ப்ரூக்.**

1939-ம் வருஷத்தில் பிரிடனிலிருந்து ஒரு வருஷத்திற்கு உணவுப் பொருள்களும் தீவனங்களும் 22 மிலியன்கள் அனுப்பப்பட்டன. பிரிடனிலுள்ள 31,750,000 ஏகராவில் 18,750,000 ஏகராக்கள் புல் தரையாக இருந்தன. அவற்றின் பெரும் பாகம் யாதொரு பிரயோஜனமும் உள்ளவையல்ல. கால்நடைகள் அங்கு சஞ்சாரம் செய்து இறக்குமதி செய்யப்பட்ட தீவனத்தை உட்கொண்டுவந்தன. 13 மிலியன ஏகராத்தான் சாகுபடி செய்யப்பட்டது. இந்த வேலையில் 3,50,000 குடியானவர்களும், 7,50,000 கூலியாட்களும் வேலை செய்து வந்தார்கள். அவர்களில் 5,50,000 ஆண் தொழிலாளர்கள்.

செழிப்பான நிலங்களில் விவசாயம் மிகவும் நன்றாய் செய்யப்பட்டு வந்தது. ஆகிலும் பிரிடனில் பெரும்பான்மையான இடங்களில் விவசாய முறைகள் குறைவுபட்டுவிட்டன. அநேக வருஷங்களாக விவசாயிகள் எவ்விதம் உணவுப் பொருள்களை அதிகரிக்கவேண்டும் என்பதை கவனியாது நஷ்டமன்னியில் எவ்விதம் சாகுபடி செய்வதென்பதில் அதிக கவனம் செலுத்திவந்தார்கள். ஆகையால் நில சம்பந்தமாக, தொழிலாளர்களும், உரங்களும், முஸ்தீப்புகளும் அதிகமாக உபயோகப்படவில்லை.

இந்த நிலைமையுடன் பிரிடன் பேரில் ஈடுபடும்படி நேர்ந்தது. அத்துடன் யூ-படகுகளின் மூலம் வறுமை ஏற்படும் அபாயமும் நேரிட்டது. உணவுப் பொருளுக்கு மட்டும்தான் ஆபத்து ஏற்பட்டதென்பதில்லை. உணவுப்பொருள்களை அதிகரிக்கவும் கப்பல்களின் சேவையைக் குறிக்கவும் விவசாயத்தை மறுபடியும் அபிவிருத்தி செய்யவேண்டியதாயிற்று. இல்லாவிடில் பிரிடன் பட்டினிகிடக்கவேண்டியதுடன் யுத்த முஸ்தீப்புகளும் அவைகளுக்கு தேவையான இயற்கை பொருள்களும் பிரிடனுக்கு வந்திருக்கமுடியாது. யுத்தகாலம் பூரா விலும் வறுமையை அகற்ற பயிர் மிகச் செய்யுங்கள் என்று சொல்லவில்லை. ஹிட்லரையும் அவனுடைய கொள்ளைக்கூட்டத்தாரையும் நொருக்க கப்பல்களை மீதப்படுத்த உணவுப் பொருள்களை உற்பத்தி செய்யுங்கள் என்று சொல்லிவந்தார்கள். ஆரம்பத்திலிருந்தே வெற்றிக்கான கோஷம் சப்தித்துக்கொண்டிருந்தது.

பிரிடிஷ் விவசாயிகள் இந்தப் போர் தத்துவத்தை நன்கு உணர்ந்தார்கள். அதனால் ஏற்பட்ட உற்பத்தி அளவு புள்ளி விவரங்கள் கவனிக்கமுள்ளவை. யுத்தத்துக்கு முன் பிரிடன் வருஷா வருஷம் சராசரி உணவுப்பொருள், தீவனம் முதலியவற்றில் 22,026,000 டன்களை இறக்குமதி செய்தது. 1943-ம் வருஷத்தில் இந்த அளவு பாதிக்குக் குறைந்து 11,525,000 டன்களாக இருந்தது. பிரிடிஷ் விவசாயிகள் அதமபக்ஷமாக 70 சத விகிதமே காலரிகள், புரோடீன் சம்பந்தமான உணவுப் பொருளை அதிகமாக உற்பத்திசெய்திருக்கிறார்கள்.

இவைகள் அபாரமாகத் தோன்றினாலும் இவைகள் உண்மையை எவ்வளவுதூரம் விளக்கிக் காட்டுகின்றன. சாகுபடிக்குக் கொண்டுவரக்கூடிய நிலங்கள் பாக்கியே கிடையாது. எல்லா நிலங்களிலும் ஏதாவது ஒரு பயிர் நின்றுகொண்டிருந்தது. சில இடங்களில் மேய்ச்சலுக்கான புல் வளர்ச்சி செய்யப்பட்டிருந்தது. சில நிலங்கள் நல்ல ஸ்திதிக்குக் கொண்டுவரப்பட்டனவென்றாலும் அவைகள் ஒரு பொருட்டாகமாட்டாது.

உண்மையாக யுத்தகாலத்தில் உற்பத்திசெய்யப்பட்ட உணவுப்பொருள் யுத்தத்துக்கு முன் சாகுபடி செய்யப்பட்டிருந்ததைவிடக் குறைவான பூமியில்தான் உற்பத்தி செய்யப்பட்டது. பிரிடனின் சாகுபடி நிலங்கள் 6,00,000 ஏகர்கள் அதாவது 1.9 சத விகிதம் குறைந்துவிட்டன. அவைகள் விமானங்களுக்கும், போர்ப்பயிர்ச்சி தளங்களுக்கும், மற்ற ராணுவத் தேவைகளுக்கும் எடுத்துக்கொள்ளப்பட்டன. ஆகையால் உணவுப்பொருள் குறைவான நிலங்களிலும் சேவைப்படைகளுக்குச்சென்ற 1,00,000 நிபுணர்களின் ஒத்தாசையன்னியிலும் உற்பத்தி செய்யப்பட்டது.

பண்ணைகளில் யுத்தத்துக்கு முன் இருந்தவர்களில் அவர்கள் ஐந்தில் ஒருபாகம்தான். அவர்களுக்கு பதிலாக ஸ்திரீகள் வேலைசெய்துவந்தார்கள். அவர்களில் 8,000 பேர்கள் ஸ்திரீகள் பண்ணைப்படையைச் சேர்ந்தவர்கள். இந்தப்படையில் சேர்ந்துகொள்ளுவதற்கு அவர்களுக்கு விவசாய சம்பந்தமாக ஒரு அனுபவமும் இருக்கக்கூடாது. ஏனென்றால் ஏற்கனவே இருந்தவர்களைச் சேர்க்காமல் புதிய ஆட்களைச் சேர்க்கவேண்டுமென்ற கொள்கை கையாளப்பட்டது. கடைகள், ஆபீஸ்கள், நெசவாலைகள், சிகையலங்கார விடுதிகள், கலா, தொழில் ஸ்தாபனங்கள், வீடு, குடிசை முதலியவற்றிலிருந்து வந்த வாலண்டியர்களின் சேவை ஸ்தோத்திரத்திற்கும் மீறியது. குடியானவர்கள் அவர்களைப் பாராட்டுகிறார்கள். ஆகிலும் தொழிற்முறையிலிருந்து பார்த்தால், ஆட்வர்களுக்குப் பதிலாக ஸ்திரீகளை அமர்த்துவதென்பது திருப்திகரமான நடவடிக்கையல்ல.

மேலும் மனிதர்களின் ஆகாரத்துக்கான உணவுப்பொருள்களை மட்டும் பயிர்செய்தால் போதாது. யுத்தத்துக்குமுன் பிரிடன் வருஷாவருஷம் 8,750,000 டன்கள் தீவனத்தை இறக்குமதி செய்துவந்தது. இந்த இறக்குமதி கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்துவந்து, சென்ற வருஷத்தில் 1,250,000 டன்கள்தான் இறக்குமதி செய்யப்பட்டன.

இந்த நிலைமையை சமாளிக்க நாட்டிலுள்ள பன்றிகளில் பாதி பாகமும், கோழிகளின் மூன்றில் ஒரு பாகமும் அழிக்கப்பட்டன. ஆகிலும் எஞ்சியுள்ளவைகளுக்கும் கால்நடைகளுக்கும் தீவனம் வேண்டும். யுத்தம் ஆரம்பித்தபின் பிரிடிஷ் விவசாய சரித்திரத்திலேயே இப்பொழுதுதான் கால்நடைகள் அதிகரித்தன. இந்த நிலைமையை பலப்படுத்த, 1940-ம் வருஷத்தில் யுத்த நிலைமையில் நெருக்கடி ஏற்பட்டு மிகுந்த பீதி ஏற்பட்டிருந்தபொழுது சில வகுப்பினருக்கும், முக்கியமாக கர்ப்ப ஸ்திரீகளுக்கும் ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கும் குறைவான விலையில் பால் ஸப்ளை செய்வது என்ற தேசிய பால் ஸப்ளை திட்டம் அமுலுக்கு வந்தது. குழந்தைகள்தான் எதிர்கால க்ஷேமத்துக்குரியவர்களென்றும் அவர்

களையாவது நன்கு போஷிக்கவேண்டுமென்ற எண்ணம் தோன்றிற்று, ஆனாலும் வேலையின் அதிகரிப்பினால் ஏற்பட்ட சக்தி உயர்வினாலும் பாலுக்கு மிருந்த தேவை ஏற்பட்டது. அதாவது வருஷத்தில் உற்பத்தியாகும் அளவிற்கு 40 சத விகிதம் அதிகம் வேண்டியிருந்தது வருஷத்திற்கு 870,000,000 காலன்களுக்கு பதிலாக 1,200 மிலியன் காலன்கள் பால் தேவைப்பட்டது.

ஆகையால் பால் பண்ணைக்காரர்கள் பசுமாடு மேயும் ஸ்தலங்களைப் பண்படுத்தி கோதுமை, சர்க்கரைவள்ளிக் கிழங்கு, உருளைக்கிழங்கு முதலியவற்றை பயிர் செய்துவந்தார்கள். உற்பத்தி செய்யப்பட்டுவந்த தீவனத்துக்குப் பதிலாகப் பொருளைச் சம்பாதிக்க புல் மிருந்த ஏகராக்களைச் சாகுபடி செய்தார்கள். அதே சமயத்தில் கணக்குகளுக்கு மிகவும் அதிகமான பால் ஸப்ளைக்கும் அவர்கள் வழிதேட ஆரம்பித்தார்கள்.

ஆயினும் அவர்கள் அதைச் செய்து முடித்துவிட்டார்கள். எவ்விதம் அதைச் செய்து முடித்தார்களென்று ஒருவரும் அறியமுடியாது. ஒவ்வொரு பால் பண்ணையிலும் நடைமுறை வேறுபட்டது. ஒவ்வொரு பால்பண்ணை விவசாயியும் அவனுடைய புத்திசாலித்தனத்தையும், ஐச்வர்யங்களையும், உபயோகித்து தினசரி பன்னிரெண்டு அநேக புதிய பிரச்னைகளைத் தீர்த்துவிடுவான். அவர்கள் பாலை வியாபாரத்திற்கு அனுப்புவதற்காக வெண்ணெயையும் பால் கட்டியையும் தயாரிப்பதை நிறுத்திவிட்டார்கள். கன்றுகளுக்குப் பால் ஸப்ளை செய்வதில் சிக்கனம் செய்வதற்காக பதில்வெட்டு உணவுப் பொருள்களை அவர்கள் உபயோகித்துவருகிறார்கள். அவர்கள மாடுகளை அதிகமாக மேய்ச்சலுக்கு விட்டார்கள். கெடுதலாகப்போன நிலங்களை உழுது சிலாக்கியமான புல்லை வளர்ச்சி செய்தார்கள். அவர்கள் அதிகமான உரங்களையும், அதிக விஞ்ஞான சாஸ்திரத்தையும், அதிக யந்திர சாதனங்களையும் அதிக புத்தி சக்தியையும், அதிக பிரயாசையையும் உபயோகித்து வருகிறார்கள்.

விவசாய கல்லூரிகளும், ஆராய்ச்சி ஸ்தாபனங்களும் மூடப்பட்டு அவைகளிலிருந்த விஞ்ஞான சாஸ்திர நிபுணர்கள் விவசாயிகளுக்கு ஒத்தாசை செய்ய அனுப்பப்பட்டார்கள். அவர்கள் பயிர் மிகைச்செய்வதை மேல்பார்வையிட்டு தூண்டுவதற்காக நிர்வாகம் அமைத்த கௌண்டி யுத்த விவசாய செயல் கமிட்டிகளில் சேர்க்கப்பட்டார்கள். இருதரப்பாரும் இந்த முறைப்படி லாபம் அடைந்தார்கள். அவர்கள் புல் தரைகளை மாற்றி கிருஷி செய்து நான்கு மடங்கு அதிகமான உணவுப் பொருள்களை உற்பத்தி செய்தார்கள்.

கௌண்டி யுத்த விவசாய கமிட்டிகள் அநேக யந்திரங்களை உபயோகித்து விதைகளைப் போட்டார்கள். ஐந்து வருஷங்களில் டிராக்டர்கள் 55,000 த்திலிருந்து 1,80,000 வரையில் அதிகரித்தது. அவைகளுக்குத் தேவையான விவசாய யந்திரமும் அதிகரிக்கப்பட்டன. டிராக்டர்கள், கொழுக்கள், விதைக்கும் யந்திரங்கள், உருளைகள், கட்டிகளை உடைக்கும் யந்திரங்கள், கோதுமை அறைப்பவைகள், உரத்தைப் போடும் யந்திரங்கள், இதுபோன்ற விவசாயத்துக்குரிய கருவிகள் எல்லாம் ஒர்க்ஷாப்புகளிலிருந்து அனுப்பப்பட்டன. இந்தக் கருவிகளின் மூன்றில் இரண்டு பாகத்தை பிரிட்டனிலுள்ள விவசாய எஞ்ஜினியர்கள் தயாரித்தார்கள். அவர்கள் யுத்த தளவாட உற்பத்தியிலும் ஈடுபடவேண்டியிருந்தது.

இந்த முயற்சியின் பலனை இப்பொழுது உலகம் அறிந்துவிட்டது. ஐந்து வருஷங்களில் பிரிட்டன் மேய்ச்சல் பொருள் சாகுபடியிலிருந்து விவசாயத்துக்கு மாறிவிட்டது. 1939-ம் வருஷத்தில் சாகுபடிக்கு லாயக்குள்ளதாக இருந்த நிலம் 13 மிலியன என்றால் 1944-ல் அது 19 மிலியன் ஏகராவுக்கு அதிகரித்தது. புல் விளையும் ஏகராக்கள் 19 மிலியனிலிருந்து 12 மிலியனுக்குக் குறைந்துவிட்டது. பிரிடிஷ் மக்கள் மறுமடியும் விவசாயிகளாக ஆகிவிட்டார்கள். அவர்களின் திறமை அளவு இப்பொழுது அதிகரித்துவிட்டது. 1943-ம் வருஷத்தில் எல்லா வகைப்பட்ட தானியங்களும் 8,638,000 டன்கள் உற்பத்தி செய்யப்பட்டன. இது பிரிடிஷ் சரித்திரத்திலேயே மிகவும் அதிகமானது. வியவசாயம் மிகுதியாக இருந்த 1870-ம் வருஷத்தின் உற்பத்தியைவிட இது மிகவும் அதிகமானது. உபரியான பாலும் உற்பத்தி செய்யப்பட்டது. தொழிலாளர்கள் குறைவும் தீவனக்குறைவுமிருந்த போதிலும் கால்நடைகள் 1939-ம் வருஷம் இருந்ததைவிட அதிகமாகயிருக்கின்றன.

குடியானவர்களும் தங்களுடைய கடமையைச் செய்திருக்கிறார்கள். அவர்களுக்கும் வியப்புண்டாகிவிட்டது. யுத்தத்தில் வெற்றிபெருவதற்காகக் கப்பல்களை மீதப்படுத்த அவர்கள் உதவி செய்திருக்கிறார்கள். வெற்றியை சம்பாதிக்க உதவியவர்களில் அவர்களுக்கும் பெருமைகொள்ளக்கூடிய ஒரு பங்கு உண்டு.

## தஞ்சாவூர், சுபேதார் G. லோகநாதன் எக்ஸ்ட்ரா அஸிஸ்டெண்டு ரிக்ரூடிங் ஆபீஸரின் 1945 ஜூன் மாதத்திய சுற்றுப்பிரயாண நிகழ்ச்சிக் குறிப்பு.

| தேதி. | நாள். | பிரயாண வகை. | புறப்படும் இடம். | மணி. | சேரும் இடம். | மணி. | மைல். | ஷரா. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 19–6–45 | செவ்வாய். | ரஸ்தா. | தஞ்சாவூர் ... | காலை. | புதுக்கோட்டை ... | காலை. | 39 | முகாம். |
| 20–6–45 | புதன். | ,, | புதுக்கோட்டை ... | ,, | திருமயம் ... | ,, | 12 | ,, |
| ,, | ,, | ,, | திருமயம் ... | மாலை. | புதுக்கோட்டை ... | மாலை. | 12 | ,, |
| 21–6–45 | வியாழன். | ,, | புதுக்கோட்டை ... | காலை. | பொன்னமராவதி ... | காலை. | 27 | ,, |
| ,, | ,, | ,, | பொன்னமராவதி ... | மாலை. | புதுக்கோட்டை ... | மாலை. | 27 | ,, |
| 22–6–45 | வெள்ளி | ,, | புதுக்கோட்டை ... | காலை. | ஆதனக்கோட்டை. | காலை. | 15 | ,, |
| ,, | ,, | ,, | ஆதனக்கோட்டை. | மாலை. | தஞ்சாவூர் ... | மாலை. | 24 | ,, |

---

## புதுக்கோட்டை ஸமஸ்தான தேசிய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 250 (3-வது பிரிவு).

| | | | | |
|---|---|---|---|---|
| 4– 6–45 | திருமெய்யம் | ... | மாலை | 7.00 |
| ,, | ராமச்சந்திரபுரம் | ... | ,, | 7.30 |
| 5– 6–45 | புலியூர் | ... | ,, | 7.00 |
| ,, | கண்ணங்குடி | ... | ,, | 7.30 |
| 6– 6–45 | அன்னவாசல் | ... | ,, | 7.00 |
| ,, | கிழக்குறிச்சி | ... | ,, | 7.30 |
| 7– 6–45 | கீழாநிலை-புதுப்பட்டி | ... | மாலை | 7.00 |
| ,, | கீழாநிலைக்கோட்டை | ... | ,, | 7.30 |
| 8– 6–45 | பள்ளிவாசல் | ... | ,, | 7.00 |
| ,, | பில்லமங்கலம் | ... | ,, | 7.30 |
| 9– 6–45 | முனிஸிபல் ஆபீஸ் | ... | ,, | 6.00 |
| 10– 6–45 | கீரப்பழனி | ... | ,, | 7.00 |
| ,, | ஆலூர் | ... | ,, | 7.30 |

### பிரஸங்கம் 251. (4-வது பிரிவு).

| | | | | |
|---|---|---|---|---|
| 11– 6–45 | குடுமியாமலை | ... | ,, | 7.00 |
| ,, | பரம்பூர் | ... | ,, | 7.30 |
| 12– 6–45 | பெருங்களூர் | ... | ,, | 7.00 |
| ,, | ஆதனக்கோட்டை | ... | ,, | 7.30 |
| 13– 6–45 | உடையாளிப்பட்டி | ... | ,, | 7.00 |
| ,, | கிள்ளுகோட்டை | ... | ,, | 7.30 |
| 14– 6–45 | அரிமளம் | ... | மாலை | 7.00 |
| ,, | ராயவரம் | ... | ,, | 7.30 |
| 15– 6–45 | மூதலிப்பட்டி. | ... | ,, | 7.00 |
| ,, | குருவிக்கொண்டான்பட்டி | ... | ,, | 7.30 |
| 16– 6–45 | முனிஸிபல் ஆபீஸ் | ... | ,, | 6.00 |
| 17– 6–45 | சூரக்காடு | ... | ,, | 7.00 |
| ,, | கோட்டைக்காடு | ... | ,, | 7.30 |

### யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

| | |
|---|---|
| 5— 6—45 | வடகாடு. |
| 6— 6—45 | கீழாநிலை-புதுப்பட்டி. |
| 7— 6—45 | ஆலங்குடி. |
| 8— 6—45 | புதுக்கோட்டை. |
| 9— 6—45 | திருமயம். |
| 10— 6—45 | எம்பல். |
| 12— 6—45 | ராமச்சந்திரபுரம். |
| 13— 6—45 | கரம்பக்குடி. |
| 14— 6—45 | கீழாநிலை. |
| 15— 6—45 | புதுக்கோட்டை. |
| 16— 6—45 | வெட்டன்விடுதி. |
| 17— 6—45 | விராச்சிலை. |

பிரகிருத யுத்தத்தில் அயல் நாடுகளில் சேவை புரிந்துவரும் இந்திய துருப்புகளுக்கு பொழுது போக்காய் படிக்கக்கூடிய தமிழ் புஸ்தகங்கள் தேவை. தகுதியான பழைய புஸ்தகங்களை இனாமாகக் கொடுக்கும்படியாக பொதுஜனங்களை கேட்டுக்கொள்ளுகிறோம்.

அவைகளை ஸ்டேட் அச்சாபீஸ் சூபரின்டென்டெண்ட் அவர்களுக்கனுப்ப வேண்டும். அவர் அவைகளைச் சேரவேண்டிய இடத்துக்கு அனுப்பிவிடுவார்.

Sri Brihadamba State Press, Pudukkottai. 1,600—5-6-45.